Atla Academy
the magical way of success
ISO 9001:2015 CERTIFIED INSTITUTE
தமிழகத்தில் எங்கிருந்து வேண்டுமானாலும் உங்கள் MOBILE வழியே படிக்கலாம்
9790072644 / 9626493231

1) முதல் உலகப்போரின் இறுதியில் நிலைகுலைந்து போன மூன்று பெரும் பேரரசுகள் யாவை?

(a) ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரி, உதுமானியர்
(b) ஜெர்மனி, ஆஸ்திரிய- ஹங்கேரி, ரஷ்யா (c) ஸ்பெயின், போர்ச்சுகல், இத்தாலி
(d) ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரி, இத்தாலி

2) எவ்விடத்தில் எத்தியயோப்பியாவின் படை இத்தாலியின் படைகளைத் தோற்கடித்தது?

(a) டெல்வில்லி (b) ஆரஞ்சு நாடு **(c) அடோவா** (d) அல்ஜியர்ஸ்

3) பத்தொன்பதாம் நூற்றாண்டு முடிவடையுந்தருவாயில் கிழக்கு ஆசியாவில் உதயமான வலிமைவாய்ந்த நாடு எது?

(a) சீனா **(b) ஜப்பான்** (c) கொரியா (d) மங்கோலியா

4) "ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்" எனக் கூறியவர் யார்?

(a) லெனின் (b) மார்க்ஸ் (c) சன் யாட் சென் (d) மா சே துங்

5) மார்ன் போர் எதற்காக நினைவு கூறப்படுகிறது?

(a) ஆகாயப் போர்முறை **(b) பதுங்குக் குழிப்போர்முறை** (c) நீர்மூழ்கிக் கப்பல்போர்முறை
(d) கடற்படைப் போர்முறை

www.Padasalai.Net

6) எந்த நாடு முதல் உலகப்போருக்குப் பின்னர் தனித்திருக்கும் கொள்கையைக் கைக்கொண்டது?

(a) பிரிட்டன் (b) பிரான்ஸ் (c) ஜெர்மனி **(d) அமெரிக்க ஐக்கிய நாடுகள்**

7) பன்னாட்டுச் சங்கத்தின் முதல் பொதுச்செயலர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

(a) பிரிட்டன் (b) பிரான்ஸ் (c) டச்சு (d) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

8) பின்லாந்தைத் தாக்கியதற்காக பன்னாட்டுச் சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்ட நாடு எது?

(a) ஜெர்மனி **(b) ரஷ்யா** (c) இத்தாலி (d) பிரான்ஸ்

9) இத்தாலி யாருடன் லேட்டரன் உடன்படிக்கையைச் செய்து கொண்டது?

(a) ஜெர்மனி (b) ரஷ்யா **(c) போப்** (d) ஸ்பெயின்

10) யாருடைய ஆக்கிரமிப்போடு மெக்சிகோ நாகரிகம் நிலைகுலைந்து போயிற்று?

(a) ஹெர்மன் கோர்ட்ஸ் (b) பிரான்சிஸ்கோ பிசாரோ (c) தௌசெயின்ட் லாவெர்ட்யூர்
(d) முதலாம் பெட்ரோ

11) பெரு நாட்டை யார் தங்களுடைய பகுதிகளில் ஒன்றாக ஆக்கிக்கொண்டனர்?

(a) ஆங்கிலேயர் **(b) ஸ்பானியர்** (c) ரஷ்யர் (d) பிரெஞ்சுக்காரர்

12) லத்தீன் அமெரிக்காவுடன் 'நல்ல அண்டை வீட்டுக்காக்காரன்' எனும் கொள்கையைக் கடைப்பிடித்த அமெரிக்கக் குடியரசுத்தலைவர் யார்?

(a) ரூஸ்வெல்ட் (b) ட்ரூமன் (c) உட்ரோவில்சன் (d) ஐசனோவர்

13) உலகத்தின் எந்தப்பகுதி டாலர் அரசியல் ஏகாதிபத்தியத்தை விரும்பவில்லை?

(a) ஐரோப்பா **(b) லத்தீன் அமெரிக்கா** (c) இந்தியா (d) சீனா

14) தென்னாப்பிக்காவின் இனஒதுக்கல் கொள்கையின் மூளையாகச் செயல்பட்டவர் யார்?

(a) வெர்வோர்டு (b) ஸ்மட்ஸ் (c) ஹெர்சாக் (d) போதா

தென் அமெரிக்காவின் விடுதலையைக் குறிக்கப்படுத்தியது எது?

15) தென் அமெரிக்காவின் விடுதலையைத் துரிதப்படுத்தியது எது?

(a) அமெரிக்கா அளித்த உதவி **(b) நெப்போலியனின் படையெடுப்புகள்**
(c) சைமன் பொலிவரின் பங்கேற்பு (d) பிரெஞ்சுப் புரட்சி

16) லத்தீன் அமெரிக்க விவகாரங்களில் அமெரிக்காவின் தலையீட்டை நியாயப்படுத்துவதற்காக மன்றோ கொள்கையில் திருத்தம் கொண்டு வந்த அமெரிக்கக் குடியரசுத்தலைவர் யார்?

(a) தியோடர் ரூஸ்வெல்ட் (b) ட்ரூமென் (c) ஐசனோவர் (d) உட்ரோ வில்சன்

17) ஜப்பான் சரணடைவதாக எப்போது முறைப்படி கையெழுத்திட்டது?

(a) செம்டம்பர் 2, 1945 (b) அக்டோபர் 2, 1945 (c) ஆகஸ்டு 15, 1945
(d) அக்டோபர் 12, 1945

18) பன்னாட்டுச் சங்கம் உருவாக்கப்படுவதில் முன்முயற்சி எடுத்தவர் யார்?

(a) ரூஸ்வெல்ட் (b) சேம்பெர்லின் **(c) உட்ரோ வில்சன்** (d) பால்டுவின்

19) ஜப்பானியக் கப்பற்படை அமெரிக்க கப்பற்படையால் எங்கே தோற்கடிக்கப்பட்டது?

(a) க்வாடல்கெனால் போர் **(b) மிட்வே போர்** (c) லெனின்கிரேடு போர்
(d) எல் அலாமெய்ன்போர்

20) அமெரிக்கா தனது முதல் அணுகுண்டை எங்கே வீசியது?

(a) கவாசாகி (b) இன்னோசிமா **(c) ஹிரோஷிமா** (d) நாகசாகி

21) ஹிட்லர் எவரை மிகவும் கொடுமைப்படுத்தினார்?

(a) ரஷ்யர்கள் (b) அரேபியர்கள் (c) துருக்கியர்கள் **(d) யூதர்கள்**

22) ஜெர்மனியோடு மியூனிச் உடன்படிக்கையில் கையெழுத்திட்ட பிரிட்டன் பிரதமர் யார்?

(a) சேம்பர்லின் (b) வின்ஸ்டன் சர்ச்சில் (c) லாயிட் ஜார்ஜ் (d) ஸ்டேன்லி பால்டுவின்

23) எப்போது ஐக்கிய நாடுகள் சபையின் பட்டய சாசனம் கையெழுத்தானது?

(a) ஜுன் 26, 1942 **(b) ஜுன் 26, 1945** (c) ஜனவரி 1, 1942 (d) ஜனவரி 1, 1945

www.Padasalai.Net

24) பன்னாட்டு நீதிமன்றத்தின் தலைமையகம் எங்கே அமைந்துள்ளது?

(a) நியூயார்க் (b) சிகாகோ (c) லண்டன் **(d) தி ஹேக்**

25) வம்போவா இராணுவக் கழகத்தின் முதல் இயக்குனர் யார்?

(a) சன் யாட் சென் **(b) ஷியாங் கே-ஷேக்** (c) மைக்கேல் பொரோடின் (d) சூ-யென்-லாய்

26) எந்த அமெரிக்கக் குடியரசுத்தலைவர் பொதுவுடைமைக் கொள்கையைக் கட்டுக்குள் அடக்க ஒரு கொள்கை வரைவை முன்வைத்தார்?

(a) உட்ரோ வில்சன் **(b) ட்ரூமென்** (c) தியோடர் ரூஸ்வேல்ட்
(d) பிராங்க்ளின் ரூஸ்வேல்ட்

27) சீனாவில் மக்கள் அரசியல் கலந்தாய்வு மாநாடு எப்போது நடைபெற்றது?

(a) செப்டம்பர் 1959 (b) செப்டம்பர் 1948 (c) செப்டம்பர் 1954 **(d) செப்டம்பர் 1944**

28) அமெரிக்க ஐக்கிய நாடும் அதன் ஐரோப்பிய நேச நாடுகளும் சேர்ந்து சோவியத் நாட்டின் ஆக்கிரமிப்பைத் தவிர்க்க ஏற்படுத்திய அமைப்பின் பெயர் ________ ஆகும்.

(a) சீட்டோ **(b) நேட்டோ** (c) சென்டோ (d) வார்சா சென்டோ

29) பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் செயற்குழுவிற்கு 1969இல் தலைவராகப் பதவியேற்றவர் யார்?

(a) ஹபீஸ் அல் -ஆஸாத் **(b) யாசர் அராபத்** (c) நாசர் (d) சதாம் உசேன்

30) வடக்கு மற்றும் தெற்கு வியட்நாம் எந்த ஆண்டு ஒன்று சேர்க்கப்பட்டது?

(a) 1975 **(b) 1976** (c) 1973 (d) 1974

31) அரேபியக் கூட்டமைப்பு எவ்விடத்தில் ஏற்படுத்தப்பட்டது.?

(a) கெய்ரோ (b) ஜோர்டான் (c) லெபனான் (d) சிரியா

32) எந்த ஆண்டு வார்சா ஒப்பந்தம் கலைக்கப்பட்டது?

(a) 1979 (b) 1989 (c) 1990 **(d) 1991**

33) எந்த ஆண்டில் உடன்கட்டை ஏறுதல் (சதி) ஒழிக்கப்பட்டது?

(a) 1827 **(b) 1829** (c) 1826 (d) 1927

34) தயானந்த சரஸ்வதியால் நிறுவப்பெற்ற சமாஜத்தின் பெயர் யாது?

(a) ஆரிய சமாஜம் (b) பிரம்ம சமாஜம் (c) பிரார்த்தனை சமாஜம் (d) ஆதி பிரம்ம சமாஜம்

35) யாருடைய பணியும் இயக்கமும், 1856ஆம் ஆண்டு விதவை மறுமண சீர்திருத்தச் சட்டம் இயற்றப்படுவதற்கு வழிகோலியது?

(a) ஈஸ்வர் சந்திர வித்யாசாகர் (b) ராஜா ராம்மோகன் ராய் (c) அன்னிபெசன்ட் (d) ஜோதிபா பூலே

36) 'ராஸ்ட் கோப்தார்' யாருடைய முழக்கம்?

(a) பார்சி இயக்கம் (b) அலிகார் இயக்கம் (c) ராமகிருஷ்ணர் (d) திராவிட மகாஜன சபை

37) நாம்தாரி இயக்கத்தை உருவாக்கியவர் யார்?

(a) பாபா தயாள் தாஸ் **(b) பாபா ராம்சிங்** (c) குருநானக் (d) ஜோதிபா பூலே

38) சுவாமி ஸ்ரத்தானந்தா என்பவர் யார்

(a) சுவாமி விவேகானந்தரின் சீடர் (b) இந்திய பிரம்ம சமாஜத்தில் பிளவை ஏற்படுத்தியவர் **(c) ஆரிய சமாஜத்தில் பிளவை ஏற்படுத்தியவர்** (d) சமத்துவ சமாஜத்தை நிறுவியவர்

39) விதவை மறுமணச் சங்கத்தை ஏற்படுத்தியவர் யார்?

(a) M.G. ரானடே (b) தேவேந்திரநாத் தாகூர் (c) ஜோதிபா பூலே (d) அய்யன்காளி

40) 'சத்யார்த்தபிரகாஷ்' எனும் நூலின் ஆசிரியர் யார்?

(a) தயானந்த சரஸ்வதி (b) வைகுண்டசாமி (c) அன்னி பெசன்ட் (d) சுவாமி சாரதாநந்தா

www.Padasalai.Net

41) இந்தியாவின் வடக்கு தெற்கு பரவல்.

(a) 2500 கி.மீ (b) 2933 கி.மீ **(c) 3214 கி.மீ** (d) 2814 கி.மீ

42) இந்தியாவின் தென்கோடி முனை

(a) அந்தமான் **(b) கன்னியாகுமரி** (c) இந்திராமுனை (d) காவரட்தி

43) இமயமலையின் கிழக்கு – மேற்கு பரவல்

(a) 2500 கி.மீ (b) 2400 கி.மீ (c) 800 கி.மீ (d) 2200 கி.மீ

44) பீகாரின் துயரம் என்று அழைக்கப்படும் ஆறு

(a) நர்மதா (b) கோதாவரி **(c) கோசி** (d) தாமோதர்

45) தக்காண பீடபூமியின் பரப்பளவு __________சதுர கி.மீ ஆகும்

(a) 6 லட்சம் (b) 8 லட்சம் (c) 5 லட்சம் **(d) 7 லட்சம்**

46) மூன்று பக்கம் நீரால் சூழப்பட்ட பகுதி __________ என அழைக்கப்படுகிறது

(a) கடற்கரை (b) தீபகற்பம் **(c) தீவு** (d) நீர்ச்சந்தி

47) பாக் நீர்சந்தி மற்றும் மன்னார் வளைகுடா ________________ ஐ இந்தியாவிடமிருந்து பிரிக்கிறது.

(a) கோவா (b) மேற்கு வங்காளம் **(c) ஸ்ரீலங்கா** (d) மாலத்தீவு

48) தென்னிந்தியாவின் மிக உயரமான சிகரம்______

(a) ஊட்டி **(b) ஆனை முடி** (c) கொடைக்கானல் (d) ஜின்டா கடா

49) பழைய வண்டல் படிவுகளால் உருவான சமவெளி_______

(a) பாபர் (b) தராய் **(c) பாங்கர்** (d) காதர்

50) பழவேவேற்காடு ஏரி ________________மாநிலங்களுக்கிடையே அமைந்துள்ளது.

(a) மேற்கு வங்காளம் மற்றும் ஒடிசா (b) கர்நாடகா மற்றும் கேரளா
(c) ஒடிசா மற்றும் ஆந்திரப் பிரதேசம் **(d) தமிழ்நாடு மற்றும் ஆந்திரப் பிரதேசம்**

51) வானிலையியல் ஒரு ________ அறிவியலாகும்

(a) வானிலை (b) சமூக (c) அரசியல் (d) மனித

52) நாம் பருத்தி ஆடைகளை _______ காலத்தில் அணிகிறோம்.

(a) கோடைக்காலம் (b) குளிர்க்காலம் (c) மழைக்காலம்
(d) வடகிழக்கு பருவக்காற்று காலம்

53) மேற்கத்திய இடையூறுகளால் மழைப்பொழிவைப் பெறும் பகுதி ________

(a) தமிழ்நாடு (b) கேரளா **(c) பஞ்சாப்** (d) மத்தியப் பிரதேசம்

54) கேரளா மற்றும் கர்நாடக கடற்கரைப் பகுதிகளில் விளையும் மாங்காய்கள் விரைவில் முதிர்வதற்கு _______ காற்றுகள் உதவுகின்றன.

(a) லூ (b) நார்வெஸ்டர்ஸ் **(c) மாஞ்சாரல்** (d) ஜெட் காற்றோட்டம்

55) ஒரே அளவு மழைபெறும் இடங்களை இணைக்கும் கோடு ________ ஆகும்.

(a) சமவெப்ப கோடுகள் **(b) சம மழைக்கோடுகள்** (c) சம அழுத்தக் கோடுகள்
(d) அட்சக் கோடுகள்

56) இந்தியாவின் காலநிலை ________ ஆக பெயரிடப்பட்டுள்ளது.

(a) அயன மண்டல ஈரக் காலநிலை (b) நிலநடுக்கோட்டுக் காலநிலை
(c) அயனமண்டல பருவக்காற்றுக் காலநிலை (d) மித அயனமண்டலக் காலநிலை

57) பருவக்காற்று காடுகள் இவ்வாறு அழைக்கப்படுகின்றன.

(a) அயன மண்டல பசுமை மாறாக் காடுகள் **(b) இலையுதிர்க் காடுகள்**
(c) மாங்குரோவ் காடுகள் (d) மலைக் காடுகள்

58) இமய மலையில் 2400 மீ உயரத்திற்கு மேல் காணப்படும் காடுகள்_____

www.Padasalai.Net

(a) இலையுதிர்க்காடுகள் **(b) ஆல்பைன் காடுகள்** (c) மாங்குராவ் காடுகள்
(d) ஓதக்காடுகள்

59) சேஷாசலம் உயிர்க்கோள பெட்டகம் அமைந்துள்ள மாநிலம்_____

(a) தமிழ்நாடு **(b) ஆந்திரப் பிரதேசம்** (c) மத்தியப் பிரதேசம் (d) கர்நாடகா

60) யுனெஸ்கோவின் (UNESCO) உயிர்க்கோளப் பாதுகாப்பு பெட்டகத்தின் ஒரு அங்கமாக இல்லாதது ___________.

(a) நீலகிரி (b) அகத்திய மலை (c) பெரிய நிக்கோபார் (d) கட்ச்

61) ________ மண்ணில் இரும்பு ஆக்ஸைடு அதிகமாக காணப்படுகிறது

(a) வண்டல் (b) கரிசல் **(c) செம்மண்** (d) உவர்மண்

62) எந்த நிறுவனம் இந்தியாவில் உள்ள மண் வகைகளை 8 பெரும் பிரிவுகளாகப் பிரித்துள்ளது?

(a) இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம் (b) இந்திய வானியல் துறை
(c) இந்திய மண் அறிவியல் நிறுவனம் (d) இந்திய மண் ஆய்வு நிறுவனம்

63) ஆறுகளின் மூலம் உருவாகும் மண்

(a) செம்மண் (b) கரிசல் மண் (c) பாலைமண் **(d) வண்டல் மண்**

64) இந்தியாவின் உயரமான புவிஈர்ப்பு அணை

(a) ஹிராகுட் அணை **(b) பக்ராநங்கல் அணை** (c) மேட்டூர் அணை
(d) நாகர்ஜூனா சாகர் அணை

65) _____ என்பது ஒரு வாணிபப்பயிர்

(a) பருத்தி (b) கோதுமை (c) அரிசி (d) மக்காச் சோளம்

66) கரிசல் மண் _____________ எனவும் அழைக்கப்படுகிறது.

(a) வறண்ட மண் (b) உவர் மண் (c) மலை மண் **(d) பருத்தி மண்**

67) உலகிலேயே மிக நீளமான அணை ______

(a) மேட்டூர் அணை (b) கோசி அணை **(c) ஹிராகுட் அணை** (d) பக்ராநங்கல் அணை

68) இந்தியாவில் அதிகம் நெல் விளையும் மாநிலம்_____

(a) பஞ்சாப் (b) மகராஷ்டிரா (c) உத்தரப்பிரதேசம் **(d) மேற்கு வங்காளம்**

69) இந்தியாவில் தங்க இழைப் பயிர் என அழைக்கப்படுவது_______

(a) பருத்தி (b) கோதுமை **(c) சணல்** (d) புகையிலை

70) காபி அதிகம் உற்பத்தி செய்யும் மாநிலம்

(a) மேற்கு வங்கம் **(b) கர்நாடகா** (c) ஒடிசா (d) பஞ்சாப்

71) மாங்கனீசு இவற்றில் பயன்படுத்தப்படுகிறது.

(a) சேமிப்பு மின்கலன்கள் **(b) எஃகு தயாரிப்பு** (c) செம்பு உருக்குதல்
(d) பெட்ரோலிய சுத்திகரிப்பு

72) ஆந்த்ரசைட் நிலக்கரி ____________ கார்பன் அளவை கொண்டுள்ளது.

(a) 80% - 95% (b) 70% க்கு மேல் (c) 60% - 70% (d) 50%க்கும் குறைவு

73) பெட்ரோலியத்தில் உள்ள முக்கிய கனிமங்கள் ஹைட்ரஜன் மற்றும்________

(a) ஆக்ஸிஜன் (b) நீர் **(c) கார்பன்** (d) நைட்ரஜன்

74) தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படும் நகரம்

(a) சேலம் (b) சென்னை (c) மதுரை **(d) கோயம்புத்தூர்**

75) இந்தியாவில் முதல் சணல் ஆலை நிறுவப்பட்ட இடம்

(a) கொல்கத்தா (b) மும்பை (c) அகமதாபாத் (d) பரோடா

76) இந்தியாவில் முதல் அணுமின் நிலையம் நிறுவப்பட்ட மாநிலம்

www.Padasalai.Net

(a) குஜராத் (b) இராஜஸ்தான் **(c) மகாராஷ்டிரம்** (d) தமிழ்நாடு

77) மிக அதிகமாக கிடைக்ககூடிய ஆற்றல் வளம்

(a) உயிரி சக்தி **(b) சூரியன்** (c) நிலக்கரி (d) எண்ணெய்

78) புகழ் பெற்ற சிந்திரி உரத் தொழிலகம் அமைந்துள்ள மாநிலம்.

(a) ஜார்கண்ட் (b) பீகார் (c) இராஜஸ்தான் (d) அசாம்

79) சோட்டா நாகபுரி பீடபூமி பகுதியின் பொருளாதார வளர்ச்சிக்கு கருவாக இருப்பது

(a) போக்குவரத்து **(b) கனிமப்படிவுகள்** (c) பெரும் தேவை (d) மின்சக்தி சக்தி கிடைப்பது

80) இந்திய கடற்கரை பகுதி இரும்பு எஃகு தொழிலகங்களுள் ஒன்று அமைந்துள்ள இடம்

(a) கொல்கத்தா (b) தூத்துக்குடி (c) கோவா **(d) விசாகப்பட்டினம்**

81) மக்கள் தொகையின் பல்வேறு அம்சங்கள் பற்றிய அறிவியல் பூர்வமான படிப்பு_____

(a) ஒளிப்படவியல் **(b) மக்களியல்** (c) ஆடற்கலையில் (d) மக்களடர்த்தி

82) 2011 ஆம் ஆண்டின் மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி அதிக கல்வியறிவு பெற்ற மாநிலம்______

(a) தமிழ்நாடு (b) கர்நாடகம் **(c) கேரளா** (d) உத்திரப்பிரதேசம்

83) மனித வள மேம்பாடு _________ மூலம் கணக்கிடப்படுகிறது

(a) மனித வளக்குறியிடு (b) தனி நபர் குறியீடு **(c) மனித வள மேம்பாட்டுகுறியீடு**
(d) ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டம்(UNDP)

84) _______ போக்குவரத்து நேரடியாக உற்பத்தியாளரையும் நுகர்வோரையும் இணைக்கிறது.

(a) ரயில்வே (b) சாலை (c) வான்வழி (d) நீர்வழி

85) இந்தியாவில் தங்க நாற்கரச் சாலையின் நீளம்

(a) 5846 கி.மீ (b) 5847 கி.மீ (c) 5849 கி.மீ (d) 5800 கி.மீ

86) இந்திய உள்நாட்டு நீர்வழிப்போக்குவரத்தின் நீளமானது_______

(a) 17500 கி.மீ (b) 5000 கி.மீ **(c) 14500 கி.மீ** (d) 1000 கி.மீ

87) தேசிய தொலையுணர்வு மையம் அமைந்துள்ள இடம்_______

(a) பெங்களூரு (b) சென்னை (c) புது டெல்லி **(d) ஹைதராபாத்**

88) எளிதில் செல்லமுடியாத பகுதிகளுக்கு பயன்படும் போக்குவரத்து

(a) சாலைப் போக்குவரத்து (b) இரயில் போக்குவரத்து (c) வான்வழிப் போக்குவரத்து
(d) நீர்வழிப் போக்குவரத்து

89) கீழ்க்கண்டவற்றில் எவை வானுலங்கு ஊர்தியுடன்(ஹெலிகாப்டர்) தொடர்புடையது?

(a) ஏர் இந்தியா (b) இந்தியன் ஏர்லைன்ஸ் (c) வாயுதூத் **(d) பவன்ஹான்ஸ்**

90) இந்தியாவின் முக்கிய இறக்குமதி பொருள்

(a) சிமெண்ட் (b) ஆபரணங்கள் (c) தேயிலை **(d) பெட்ரோலியம்**

91) கீழ்காணும் வரிசையில் 'முகவுரை' பற்றிய சரியான தொடர் எது?

(a) குடியரசு, ஜனநாயக, சமயச் சார்பற்ற, சமதர்ம, இறையாண்மை
(b) இறையாண்மை, சமதர்ம, சமயச் சார்பற்ற, குடியரசு, ஜனநாயக
(c) இறையாண்மை, குடியரசு, சமயச் சார்பற்ற,சமதர்ம, ஜனநாயக
(d) இறையாண்மை, சமதர்ம, சமயச் சார்பற்ற, ஜனநாயக,குடியரசு

92) இந்திய அரசியலமைப்பின் முகவுரை எத்தனை முறை திருத்தப்பட்டது?

(a) ஒரு முறை (b) இரு முறை (c) மூன்று முறை (d) எப்பொழுதும் இல்லை

93) இந்திய அரசியலமைப்பு, தனது குடிமக்களுக்கு எந்த வகை குடியுரிமையை வழங்குகிறது?

(a) இரட்டை குடியுரிமை **(b) ஒற்றை குடியுரிமை**
(c) சில மாநிலங்களில் ஒற்றை குடியுரிமை மற்ற மாநிலங்களில் இரட்டை குடியுரிமை
(d) மேற்கண்டவைகளில் எதுவுமில்லை

www.Padasalai.Net

94) ஒரு வெளிநாட்டவர், கீழ்க்காணும் எதன் மூலம் இந்திய குடியுரிமை பெறமுடியும்?

(a) வம்சாவளி (b) பதிவு **(c) இயல்புரிமை** (d) மேற்கண்ட அனைத்தும்

95) மாறுபட்ட ஒன்றைக் கண்டுபிடி

(a) சமத்துவ உரிமை (b) சுரண்டலுக்கெதிரான உரிமை **(c) சொத்துரிமை**
(d) கல்வி மற்றும் கலாச்சார உரிமை

96) கீழ்க்காண்பவற்றில் ஒன்று, அடிப்படை உரிமையைப் பயன்படுத்துவதற்கு உதாரணம் இல்லை.

(a) கர்நாடகாவிலிருந்து, கேரளா பண்ணைகளில் வேலையாட்கள் பணிசெய்தல்
(b) கிறிஸ்துவ சமயக்குழு, தொடர்ச்சியாக, பள்ளிகளை அமைத்தல்
(c) ஆண், பெண் இருபாலரும் அரசுப்பணிகளுக்கு சம ஊதியம் பெறுதல்
(d) பெற்றோர்களின் பூர்வீக சொத்துகள் அவர்களது பிள்ளைகளுக்குச் செல்லுதல்

97) இந்தியக் குடிமக்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டால் அவர்கள் _____ஐ அணுகி தங்களது அடிப்படை உரிமைகளைப் பெறலாம்.

(a) நாடாளுமன்றம் (b) தலைமை வழக்குரைஞர் (c) இந்தியக் குடியரசு தலைவர்
(d) இந்திய உச்ச நீதிமன்றம்

98) பின்வருவனவற்றுள் எந்த உரிமை Dr. B.R. அம்பேத்கர் அவர்களால் 'இந்திய அரசியலமைப்பின் இதயம் மற்றும் ஆன்மா' என விவரிக்கப்பட்டது?

(a) சமய உரிமை (b) சமத்துவ உரிமை
(c) அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை (d) சொத்துரிமை

99) அடிப்படை உரிமைகள் எவ்வாறு நிறுத்திவைக்கப்பட முடியும்?

(a) உச்சநீதி மன்றம் விரும்பினால் (b) பிரதம மந்திரியின் ஆணையினால்
(c) தேசிய அவசரநிலையின் போது குடியரசு தலைவரின் ஆணையினால்
(d) மேற்கண்ட அனைத்தும்

100) நமது அடிப்படை கடமைகளை _______ இடமிருந்து பெற்றோம்.

(a) அமெரிக்க அரசியலமைப்பு (b) கனடா அரசியலமைப்பு **(c) ரஷ்யா அரசியலமைப்பு**
(d) ஐரிஷ் அரசியலமைப்பு

101) வழிகாட்டும் நெறிமுறைகள் எம்முறையில் வகைப்படுத்துப்படுகின்றன?

(a) தாராளவாதம் மற்றும் கம்யூனிச கொள்கைகள்
(b) சமதர்ம மற்றும் கம்யூனிச கொள்கைகள்
(c) தாராளவாதம், காந்திய மற்றும் கம்யூனிச கொள்கைகள்
(d) சமதர்ம, காந்திய மற்றும் தாராளக் கொள்கைகள்

102) எந்த பிரிவின் கீழ் நிதிநிலை அவசரநிலையை அறிவிக்க முடியும்?

(a) சட்டப்பிரிவு 352 (b) சட்டப்பிரிவு 356 **(c) சட்டப்பிரிவு 360** (d) சட்டப்பிரிவு 368

103) இந்திய அரசியலமைப்பின் எந்த பிரிவில் அரசியலமைப்பு திருத்தம் நடைமுறை குறித்து தரப்பட்டுள்ளது?

(a) சட்டப்பிரிவு 352 (b) சட்டப்பிரிவு 356 (c) சட்டப்பிரிவு 360 **(d) சட்டப்பிரிவு 368**

104) எந்தக் குழுக்கள்/கமிஷன்கள் மத்திய-மாநில உறவுகள் பற்றி பரிந்துரை செய்தன?
1. சர்க்காரியா குழு
2. ராஜமன்னார் குழு
3. M.N. வெங்கடாசலையா தேர்ந்தெடு
கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடு

(a) 1,2 & 3 **(b) 1 & 2** (c) 1 & 3 (d) 2 & 3

105) _____ மத்திய அரசின் அரசியலமைப்புத் தலைவர் ஆவர்.

www.Padasalai.Net

(a) குடியரசுத் தலைவர் (b) தலைமை நீதிபதி (c) பிரதம அமைச்சர்
(d) அமைச்சர்கள் குழு

106) நாடாளுமன்ற முறை அரசாங்கத்தின் உண்மையான நிர்வாக அதிகாரம் பெற்றவர் யார்?

(a) இராணுவம் **(b) பிரதமர்** (c) குடியரசுத் தலைவர் (d) நீதித்துறை

107) ஒரே மசோதாவை நிதிமசோதாவா அல்லது இதர மசோதாவா என தீர்மானிக்கும் அதிகாரம் பெற்றவர்.

(a) குடியரசுத் தலைவர் (b) இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர்
(c) நாடாளுமன்ற விவகார அமைச்சர் **(d) லோக் சபாவின் சபாநாயக்கர்**

108) அமைச்சர்கள் குழு ஒட்டுமொத்தமாக இதற்குப் பொறுப்புடையவர்களாவர்.

(a) குடியரசுத் தலைவர் **(b) மக்களவை** (c) பிரதம அமைச்சர் (d) மாநிலங்களவை

109) சட்டமியற்றும் நடவடிக்கைகளில் இந்திய நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்திற்குத் தலைமை வகிப்பவர்.

(a) நாடாளுமன்றத்தின் மூத்த உறுப்பினர் (b) மக்களவை சபாநாயகர்
(c) இந்தியக் குடியரசுத் தலைவர் (d) மாநிலங்களவை தலைவர்

110) லோக்சபா தேர்தலில் போட்டியிட தேவையான குறைந்தபட்ச வயது _____

(a) 18 வயது (b) 21 வயது **(c) 25 வயது** (d) 30 வயது

111) இந்திய மாநிலங்களின் எல்லைகளை மாற்றியமைக்கும் அதிகாரம் பெற்றவர் / பெற்ற அமைப்பு.

(a) குடியரசுத் தலைவர் (b) பிரதம அமைச்சர் (c) மாநில அரசாங்கம்
(d) நாடாளுமன்றம்

112) கீழ்க்காணும் எந்த விதியின் அடிப்படையில் குடியரசுத் தலைவர் நிதி நெருக்கடி நிலையினை அறிவிக்கிறார்?

(a) சட்டப்பிரிவு 352 **(b) சட்டப்பிரிவு 360** (c) சட்டப்பிரிவு 356 (d) சட்டப்பிரிவு 365

113) உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் மற்ற நீதிபதிகளை நியமிப்பவர்.

(a) குடியரசுத் தலைவர் (b) இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர் (c) ஆளுநர்
(d) பிரதம அமைச்சர்

114) பின்வரும் எந்த அடிப்படையில் மாநிலங்களுக்கிடையிலான சிக்கல்களை தீர்க்கும் அதிகாரத்தை உச்சநீதிமன்றம் பெற்றுள்ளது?

(a) மேல்முறையீடு நிதிவரையறை **(b) தனக்கேயுரிய நீதிவரையறை**
(c) ஆலோசனை நீதிவரையறை (d) மேற்கூறியவற்றில் எதுவுமில்லை

115) நீ இந்தியக் குடியரசுத் தலைவராக தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் கீழ்க்கண்ட எந்த முடிவினை எடுப்பாய்?

(a) அமைச்சரவையின் தலைவரை உன்னுடைய விருப்பத்திற்கு நியமிப்பது
(b) இரண்டு அவைகளிலும் நிறைவேற்றப்பட்ட மசோதாவை மறுபரிசீலனைக்குட்படுத்த கேட்டுக் கொள்வது
(c) உன்னுடைய விருப்பத்திற்கு பிரதமரை தேர்ந்தெடுப்பது
(d) மக்களவையில் பெரும்பான்மை பெற்ற பிரதமரை பதவி நீக்கம் செய்வது

116) மாநில ஆளுநரை நியமிப்பவர்.

(a) பிரதமர் (b) முதலமைச்சர் **(c) குடியரசுத் தலைவர்** (d) தலைமை நீதிபதி

117) மாநில சபாநாயகர் ஒரு ________

(a) மாநிலத் தலைவர் (b) அரசின் தலைவர் (c) குடியரசு தலைவரின் முகவர்
(d) மேற்கண்ட எதுவுமில்லை

118) கீழ்காணும் எந்த ஒன்று ஆளுநரின் அதிகாரமல்ல.

www.Padasalai.Net

(a) சட்டமன்றம் (b) நிர்வாகம் (c) நீதித்துறை **(d) தூதரகம்**

119) ஆங்கிலோ - இந்தியன் வகுப்பினரிலிருந்து ஒரு பிரதிநிதியை சட்டமன்றத்திற்கு யார் நியமிக்கிறார்?

(a) குடியரசுத் தலைவர் **(b) ஆளுநர்** (c) முதலமைச்சர் (d) சட்டமன்ற சபாநாயகர்

120) ஆளுநர் யாரை நியமனம் செய்வதில்லை?

(a) முதலமைச்சர் (b) அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர்
(c) மாநில தலைமை வழக்குரைஞர் **(d) உயர் நீதிமன்ற நீதிபதிகள்**

121) மாநில முதலமைச்சரை நியமிப்பவர்.

(a) சட்டமன்றம் **(b) ஆளுநர்** (c) குடியரசுத் தலைவர் (d) சட்டமன்ற சபாநாயகர்

122) அமைச்சரவையின் தலைவர்

(a) முதலமைச்சர் (b) ஆளுநர் (c) சபாநாயகர் (d) பிரதம அமைச்சர்

123) சட்ட மேலவை என்பது

(a) 5 ஆண்டுகள் பதவிகாலம் கொண்டது (b) 6 ஆண்டுகள் பதவிகாலம் கொண்டது
(c) நிரந்தர அவை ஆகும் (d) 4 ஆண்டுகள் பதவிகாலம் கொண்டது

124) மேலவை உறுப்பினராவதற்கு குறைந்த பட்ச வயது

(a) 25 வயது (b) 21 வயது **(c) 30 வயது** (d) 35 வயது

125) மேலவை உறுப்பினர்கள்

(a) சட்டமன்ற கீழவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்
(b) பொதுவாக நியமிக்கப்படுவார்கள்
(c) உள்ளாட்சி அமைப்புகள், பட்டதாரிகள், ஆசிரியர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிறரால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்
(d) மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

126) கீழ்காணும் மாநிலங்களில் எந்த ஒன்று ஈரவை சட்டமன்றத்தைப் பெற்றிருக்கவில்லை?

(a) ஆந்திரப் பிரதேசம் (b) தெலுங்கானா **(c) தமிழ்நாடு** (d) உத்திரப் பிரதேசம்

127) இந்தியாவில் முதன்முதலில் உயர் நீதிமன்றங்கள் தொடங்கப்பட்ட இடங்கள்

(a) கல்கத்தா, பம்பாய், சென்னை (b) டெல்லி மற்றும் கல்கத்தா
(c) டெல்லி,கல்கத்தா, சென்னை (d) கல்கத்தா,சென்னை,டெல்லி

128) கீழ்க்காணும் எந்த மாநிலங்கள் பொதுவான உயர் நீதிமன்றத்தைப் பெற்றுள்ளன?

(a) தமிழ்நாடு மற்றும் ஆந்திரப்பிரதேசம் (b) கேரளா மற்றும் தெலுங்கானா
(c) பஞ்சாப் மற்றும் ஹரியானா (d) மகாராஷ்டிரா மற்றும் குஜராத்

129) GNP யின் சமம்

(a) பணவீக்கத்திற்காக சரிசெய்யப்பட்ட NNP (b) பணவீக்கத்திற்காக சரிசெய்யப்பட்ட GDP
(c) GDP மற்றும் வெளிநாட்டில் ஈட்டப்பட்ட நிகர சொத்து வருமானம்
(d) NNP மற்றும் வெளிநாட்டில் ஈட்டப்பட்ட நிகர சொத்து வருமானம்

130) நாடு வருமானம் அளவிடுவது

(a) பணத்தின் மொத்தமதிப்பு (b) உற்பத்தியாளர் பண்டத்தின் மொத்த மதிப்பு
(c) நுகர்வு பண்டத்தின் மொத்த மதிப்பு
(d) பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு

131) முதன்மை துறை இதனை உள்ளடக்கியது

www.Padasalai.Net

(a) வேளாண்மை (b) தானியங்கிகள் (c) வர்த்தகம் (d) வங்கி

132) _______ முறையில் ஒவ்வொரு இடைநிலை பண்டத்தின் மதிப்பை கூட்டும்போது, இறுதி பண்டத்தின் மதிப்பை கணக்கிடலாம்.

(a) செலவு முறை **(b) மதிப்பு கூட்டு முறை** (c) வருமான முறை
(d) நாட்டு வருமானம்

133) GDP யில் எந்த துறை மூலம் அதிகமான வேலைவாய்ப்பு ஏற்படுகிறது?

(a) வேளாண் துறை (b) தொழில்துறை **(c) பணிகள் துறை**
(d) மேற்கண்ட எதுவுமில்லை

134) பணிகள் துறையில் நடப்பு விலையில் மொத்த மதிப்பு கூடுதல் 2018-19 ல் ________ லட்சம் கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

(a) 91.06 **(b) 92.26** (c) 80.07 (d) 98.29

135) வேளாண் பண்டங்களின் உற்பத்தியில் இந்தியா _____ அதிகமாக உற்பத்தியாளர் ஆகும்.

(a) 1 வது (b) 3 வது (c) 4 வது **(d) 2 வது**

136) இந்தியாவில் பிறப்பின் போது எதிர்பார்க்கப்பட்ட ஆயுட்காலம் ______ ஆண்டுகள் ஆகும்.

(a) 65 (b) 60 (c) 70 (d) 55

137) கீழ்க்கண்டவற்றுள் எது வர்த்தக கொள்கை

(a) நீர்ப்பாசன கொள்கை **(b) இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கொள்கை**
(c) நில சீர்திருத்தக் கொள்கை (d) கூலிக் கொள்கை

138) இந்திய பொருளாதாரம் என்பது

(a) வளர்ந்து வரும் பொருளாதாரம் (b) தோன்றும் பொருளாதாரம்
(c) இணை பொருளாதாரம் **(d) அனைத்தும் சரி**

139) உலக வர்த்தக அமைப்பின் (WTO) தலைவர் யார்?

(a) அமைச்சரவை **(b) தலைமை இயக்குநர்** (c) துணை தலைமை இயக்குநர்
(d) இவற்றில் எதுவுமில்லை

140) WTO வில் தற்போதுள்ள உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை

(a) 159 **(b) 164** (c) 148 (d) 128

141) இந்தியாவில் காலனியாதிக்க வருகை

(a) போர்ச்சுகீசியர், டச்சு, ஆங்கிலேயர், டேனிஷ், பிரெஞ்சு
(b) டச்சு, ஆங்கிலேயர், டேனிஷ், பிரெஞ்சு
(c) போர்ச்சுகீசியர், டேனிஷ், டச்சு, பிரெஞ்சு , ஆங்கிலேயர்கள்
(d) டேனிஷ், போர்ச்சுகீசியர், பிரெஞ்சு , ஆங்கிலேயர், டச்சு

142) வர்த்தக நோக்கத்திற்காக முதலில் இந்தியாவுக்கு வந்தவர்கள்

(a) ரோமானிய பேரரசு **(b) போர்ச்சுகீசியர்** (c) டச்சு (d) டேனிஷ்

143) போர்ச்சுகீசியர்கள் இந்தியாவில் எப்போது குடியேறினார்கள்?

(a) 1600 (b) 1602 **(c) 1498** (d) 1616

144) காட்-இன் முதல் சுற்று நடைபெற்ற இடம்

(a) டோக்கியோ (b) உருகுவே (c) டார்குவே **(d) ஜெனீவா**

145) இந்தியா எப்போது டங்கல் திட்டத்தில் கையெழுத்திட்டது?

(a) 1984 (b) 1976 (c) 1950 **(d) 1994**

146) 1632 இல் ஆங்கிலேயர்களுக்கு "கோல்டன் ஃபயர்மான்" வழங்கியவர் யார்?

(a) ஜஹாங்கீர் **(b) கோல்கொண்டா சுல்தான்** (c) அக்பர் (d) ஔரங்கசீப்

147) வெளிநாட்டு முதலீட்டுக் கொள்கை (FIP) அறிவித்த ஆண்டு

(a) சூன் 1991 (b) சூலை 1991 **(c) சூலை-ஆகஸ்ட் 1991** (d) ஆகஸ்ட் 1991

www.Padasalai.Net

148) இந்திய அரசாங்கம் 1991 இல் _______ ஐ அறிமுகப்படுத்தியது.

(a) உலகமயமாக்கல் (b) உலக வர்த்தக அமைப்பு **(c) புதிய பொருளாதார கொள்கை**
(d) இவற்றில் எதுவுமில்லை

149) கிழக்கிந்திய கம்பெனியின் நாடுபிடிக்கும் ஆசையை எதிர்த்து நின்ற முதல் பாளையக்காரர் யார் ?

(a) மருது சகோதரர்கள் **(b) பூலித்தேவர்** (c) வேலுநாச்சியார்
(d) வீரபாண்டிய கட்டபொம்மன்

150) கர்நாடகப் போர்களில் ஈடுபட்டிருந்த போது ஏற்பட்ட செலவினங்களுக்காக கிழக்கிந்திய கம்பெனியிடமிருந்து கடனாகப் பணத்தை வாங்கியவர் யார் ?

(a) வேலுநாச்சியார் (b) பூலித்தேவர் **(c) ஆற்காட்டு நவாப்** (d) திருவிதாங்கூர் மன்னர்

151) சந்தா சாகிப்பின் மூன்று முகவர்களோடும் நெருங்கிய நட்பினை ஏற்படுத்திக் கொண்டவர் யார்?

(a) வேலுநாச்சியார் (b) கட்டபொம்மன் **(c) பூலித்தேவர்** (d) ஊமைத்துரை

152) சிவசுப்ரமணியனார் எங்கு தூக்கிலிடப்பட்டார்?

(a) கயத்தாறு **(b) நாகலாபுரம்** (c) விருப்பாட்சி (d) பாஞ்சாலங்குறிச்சி

153) திருச்சிராப்பள்ளி சுதந்திரப் பிரகடனத்தை வெளியிட்டவர் யார்?

(a) மருது சகோதரர்கள் (b) பூலித்தேவர் (c) வீரபாண்டிய கட்டபொம்மன்
(d) கோபால நாயக்கர்

154) வேலூர் புரட்சி எப்போது வெடித்தது?

(a) 1805 மே 24 (b) 1805 ஜூலை 10 **(c) 1806 ஜூலை 10** (d) 1806 செப்டம்பர் 10

155) வேலூர் கோட்டையில் புதிய இராணுவ விதிமுறைகளை அறிமுகப்படுத்தக் காரணமாயிருந்த தலைமை தளபதி யார்?

(a) கர்னல் பேன்கோர்ட் (b) மேஜர் ஆர்ம்ஸ்ட்ராங் **(c) சர் ஜான் கிரடாக்**
(d) கர்னல் அக்னியூ

156) வேலூர் புரட்சிக்குப் பின் திப்பு சுல்தானின் மகன்கள் எங்கு அனுப்பப்பட்டார்கள்?

(a) கல்கத்தா (b) மும்பை (c) டெல்லி (d) மைசூர்

157) 1818ஆம் ஆண்டு கிழக்கு வங்காளத்தில் ஹாஜி ஷரியத்துல்லா கீழ்க்கண்டவற்றில் எதனைத் தொடங்கினார்?

(a) வஹாபி கிளர்ச்சி **(b) ஃபராசி இயக்கம்** (c) பழங்குடியினர் எழுச்சி (d) கோல் கிளர்ச்சி

158) 'நிலம் கடவுளுக்குச் சொந்தம்' என்று அறிவித்ததுடன் நிலத்தின் மீது வரிவிதிப்பதோ வாடகை வசூலிப்பதோ இறைச் சட்டத்திற்கு எதிரானது என்று கூறியவர் யார்?

(a) டிடு மீர் (b) சித்து **(c) டுடு மியான்** (d) ஷரியத்துல்லா

159) நிரந்தரக் குடியிருப்பின் கீழ் ஜமீன்களை உருவாக்கும் திட்டத்தின்படி தங்கள் சொந்த நிலத்தை விட்டு விரட்டப்பட்டவர்கள் யார்?

(a) சாந்தலர்கள் (b) டிடு மீர் (c) முண்டா (d) கோல்

160) கீழ்க்காண்போரில் தீவிர தேசியவாதி யார்?

(a) தாதாபாய் நௌரோஜி (b) நீதிபதி கோவிந்த் ரானடே **(c) பிபின் சந்திரபால்**
(d) ரொமேஷ் சந்திரா

161) வங்கப்பிரிவினை எந்த நாளில் நடைமுறைக்கு வந்தது?

(a) 1905 ஜூன் 19 (b) 1906 ஜூலை 18 (c) 1907 ஆகஸ்ட் 19 **(d) 1905 அக்டோபர் 16**

162) சோட்டா நாக்பூர் குத்தகைச் சட்டம் எந்தப் பின்னணியில் நிறைவேற்றப்பட்டது?

(a) கோல் கிளர்ச்சி (b) இண்டிகோ கிளர்ச்சி **(c) முண்டா கிளர்ச்சி**
(d) தக்காண கலவரங்கள்

www.Padasalai.Net

163) 1916ஆம் ஆண்டு ஏப்ரலில் தன்னாட்சி இயக்கத்தை முதலில் தொடங்கியவர் யார்?

(a) அன்னி பெசன்ட் அம்மையார் (b) பிபின் சந்திர பால் (c) லாலா லஜபதி ராய் **(d) திலகர்**

164) நீல் தர்ப்பன் நாடகம் மூலமாக இண்டிகோ பயிரிடும் விவசாயிகளின் இன்னல்கள் குறித்து ஆங்கிலேயரின் கவனத்துக்கு கொண்டு சென்றவர் யார்?

(a) தீன பந்து மித்ரா (b) ரொமேஷ் சந்திர தத் (c) தாதாபாய் நௌரோஜி
(d) பிர்சா முண்டா

165) அமிர்தசரஸில் ரௌலட் சட்ட எதிர்ப்புப் போராட்டங்களின் போது கைது செய்யப்பட்டவர் யார்?

(a) மோதிலால் நேரு **(b) சைஃபுதீன் கிச்லு** (c) முகம்மது அலி (d) ராஜ்குமார் சுக்லா

166) இந்திய தேசிய காங்கிரசின் எந்த அமர்வில் ஒத்துழையாமை இயக்கத்துக்கு அனுமதி வழங்கப்பட்டது?

(a) பம்பாய் (b) மதராஸ் (c) லக்னோ **(d) நாக்பூர்**

167) விடுதலை நாளாக கீழ்க்கண்டவற்றில் எந்த நாள் அறிவிக்கப்பட்டது?

(a) 1930 ஜனவரி 26 (b) 1929 டிசம்பர் 26 (c) 1946 ஜூன் 16 (d) 1947 ஜனவரி 15

168) முதலாவது வனங்கள் சட்டம் எந்த ஆண்டில் இயற்றப்பட்டது?

(a) 1858 (b) 1911 **(c) 1865** (d) 1936

169) 1933 ஜனவரி 8 எந்த நாளாக அனுசரிக்கப்பட்டது?

(a) கோவில் நுழைவு நாள் (b) மீட்பு நாள் (டெ லிவரன்ஸ் டே) (c) நேரடி நடவடிக்கை நாள்
(d) சுதந்திரப் பெருநாள்

170) மாகாண தன்னாட்சியை அறிமுகம் செய்த சட்டம் எது?

(a) 1858ஆம் ஆண்டு சட்டம் (b) இந்திய கவுன்சில் சட்டம், 1909
(c) இந்திய அரசுச் சட்டம், 1919 **(d) இந்திய அரசுச் சட்டம், 1935**

171) காந்தியின் வேட்பாளரான பட்டாபி சீதாராமய்யாவை வீழ்த்தி 1939ஆம் ஆண்டு காங்கிரஸ் தலைவராக பதவிக்கு வந்தவர் யார்?

(a) ராஜேந்திர பிரசாத் (b) ஜவகர்லால் நேரு **(c) சுபாஷ் சந்திர போஸ்**
(d) மௌலானா அபுல் கலாம் ஆசாத்

172) 1947 ஆம் ஆண்டு ஆகஸ்டு 15 ஆம் நாள் இந்தியா சுதந்திரம் அடைந்த போது காந்தியடிகள் எங்கிருந்தார்?

(a) புதுதில்லி (b) அகமதாபாத் (c) வார்தா **(d) நவகாளி**

173) சென்னை மகாஜன சபையின் முதல் தலைவர் யார்?

(a) T.M. நாயர் **(b) P. ரங்கையா** (c) G. சுப்பிரமணியம் (d) G.A. நடேசன்

174) இந்திய தேசிய காங்கிரசின் மூன்றாவது மாநாடு / அமர்வு எங்கே நடைபெற்றது?

(a) மெரினா (b) மைலாப்பூர் (c) புனித ஜார்ஜ் கோட்டை **(d) ஆயிரம் விளக்கு**

175) "அதிநவீன வசதிகளுடன் கூடிய ரயிலில் அடிமைகளாக இருப்பதை விட சுதந்திரத்துடன் கூடிய மாட்டு வண்டியே சிறந்தது" எனக் கூறியவர் யார்?

(a) அன்னிபெசன்ட் (b) M. வீரராகவாச்சாரி (c) B.P. வாடியா (d) G.S. அருண்டேல்

176) கீழ்க்காண்பனவற்றில் தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தின் அதிகாரபூர்வமான ஆங்கிலச் செய்தித்தாள் எது?

(a) திராவிடன் (b) ஆந்திரப் பிரகாசிகா **(c) ஜஸ்டிஸ்** (d) நியூ இந்தியா

177) கீழ்க்காண்பவர்களுள் சுயராஜ்ஜியவாதி யார்?

(a) S. சத்தியமூர்த்தி (b) கஸ்தூரிரங்கர் (c) P. சுப்பராயன் (d) பெரியார் ஈ.வெ .ரா

178) சென்னைக்கருகேயுள்ள உதயவனத்தில் சத்யாகிரக முகாமை அமைத்தவர் யார்?

www.Padasalai.Net

(a) K. காமராஜ் (b) C. ராஜாஜி (c) K. சந்தானம் **(d) T. பிரகாசம்**

179) இந்தி எதிர்ப்பு மாநாடு எங்கே நடத்தப்பெற்றது?

(a) ஈரோடு (b) சென்னை **(c) சேலம்** (d) மதுரை

180) வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது ராணுவத்துடனான காங்கிரஸ் தொண்டர்களின் மோதல் நடைபெற்ற இடம் எது?

(a) ஈரோடு (b) சென்னை (c) சேலம் **(d) மதுரை**

181) இந்தியாவைச் சேர்ந்த சமூக சீர்திருத்தவாதிகளின் முன்னோடி______ ஆவார்.

(a) சி.வை. தாமோதரனார் (b) பெரியார் **(c) ராஜா ராம்மோகன்ராய்**
(d) மறைமலை அடிகள்

182) 1709இல் தரங்கம்பாடியில்__________ஒரு முழுமையான அச்சகத்தை நிறுவினார்.

(a) கால்டுவெல் (b) F.W. எல்லிஸ் **(c) சீகன்பால்கு** (d) மீனாட்சி சுந்தரனார்

183) __________சுயமரியாதை இயக்கத்தின் அதிகாரபூர்வச் செய்தித்தாள் ஆகும்.

(a) குடியரசு (b) புரட்சி (c) விடுதலை (d) பகுத்தறிவு

184) சமயம் அகற்றப்பட்டு அவ்விடத்தில்_________வைக்கப்பட வேண்டுமென பெரியார் விரும்பினார்.

(a) தேசியவாதம் (b) உருவ வழிபாடு மறுப்பு **(c) பகுத்தறிவுவாதம்** (d) ஆன்மீகம்

185) 1893இல் ஆதி திராவிட மகா ஜன சபையை__________ நிறுவினார் .

(a) இரட்டைமலை சீனிவாசன் (b) B.R. அம்பேத்கார் (c) ராஜாஜி (d) எம்.சி. ராஜா

186) இந்தியாவின் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட தொழிற்சங்கம்__________ இல் உருவாக்கப்பட்டது.

(a) 1918 (b) 1917 (c) 1916 (d) 1914

187) அரசு அதிகாரிகளைத் தேர்வு செய்ய ______ நீதிக் கட்சியால் நிறுவப் பெற்றது.

(a) பணியாளர் தேர்வு வாரியம் (b) பொதுப் பணி ஆணையம்

(c) மாநிலப் பணியாளர் ஆளெடுப்பு வாரியம் (d) பணியாளர் தேர்வாணையம்

188) சென்னை மாகாணத்தில், ஒடுக்கப்பட்ட வகுப்பிலிருந்து முதன் முறையாகச் சட்டமேலவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

(a) எம்.சி. ராஜா (b) இரட்டை மலை சீனிவாசன் (c) டி.எம். நாயர் (d) பி. வரதராஜுலு

189) தமிழ்நாட்டின் அட்சப் பரவல் ______முதல்______வரை உள்ளது.

(a) 8°4´ வ முதல் 13° 35´ வ வரை (b) 8° 5´ தெ முதல் 13° 35´ தெ வரை

(c) 8° 0´ வ முதல் 13° 05´ வ வரை (d) 8° 0´ தெ முதல் 13° 05´ தெ வரை

190) தமிழ்நாட்டின் தீர்க்க பரவல்________முதல்__________ வரை உள்ளது.

(a) 76°18´ கி முதல் 80°20´ கி வரை (b) 76°18´ மே முதல் 80°20´ மே வரை

(c) 10°20´ கி முதல் 86°18´ கி வரை (d) 10°20´ மே முதல் 86°18´ மே வரை

191) தமிழ்நாட்டில் உள்ள மிக உயரமான சிகரம்__________ ஆகும்.

(a) ஆனை முடி **(b) தொட்டபெட்டா** (c) மகேந்திரகிரி (d) சேர்வராயன்

192) கீழ்க்கண்டவற்றில் தமிழ்நாட்டின் மேற்கு தொடர்ச்சி மலையில் அமையாத கணவாய் எது?

(a) பாலக்காடு (b) செங்கோட்டை **(c) போர்காட்** (d) அச்சன்கோவில்

193) கீழ்க்கண்டவற்றில் அரபிக் கடலில் கலக்கும் ஆறு எது?

(a) பெரியார் (b) காவிரி (c) சிற்றார் (d) பவானி

194) தமிழ்நாட்டில் அதிக பரப்பளவில் மாங்குரோவ் காடுகள் காணப்படும் மாவட்டம் எது?

(a) இராமநாதபுரம் (b) நாகப்பட்டினம் **(c) கடலூர்** (d) தேனி

195) இந்திய வன அறிக்கை 2017 இன் படி தமிழ்நாட்டின் வனப்பரப்பளவு__________

(a) 20.21% (b) 20.31% (c) 21.20% (d) 21.30%

www.Padasalai.Net

196) பின்னடையும் பருவக்காற்று ________லிருந்து ஈரப்பதத்தை எடுத்துக் கொள்கிறது.

(a) அரபிக்கடல் **(b) வங்கக் கடல்** (c) இந்தியப் பெருங்கடல் (d) தைமுர்க்கடல்

197) கீழ்க்கண்டவற்றுள் மண் அரிப்பினால் அதிக அளவு பாதிக்கப்பட்ட மாவட்டம்___________

(a) தேனி (b) மதுரை (c) தஞ்சாவூர் (d) இராமநாதபுரம்

198) தமிழ்நாட்டில் அதிக பரப்பளவில் காடுகளைக் கொண்ட மாவட்டம் ___________

(a) தர்மபுரி (b) வேலூர் (c) திண்டுக்கல் (d) ஈரோடு

199) தென்னிந்தியாவின் நெற்களஞ்சியம் என்று அழைக்கப்படும் டெல்டா__________

(a) காவிரி டெல்டா (b) மகாநதி டெல்டா (c) கோதாவரி டெல்டா

(d) கிருஷ்ணா டெல்டா

200) தமிழ்நாட்டு மக்களின் இரண்டாவது முக்கிய உணவுப் பயிர்___________

(a) பருப்பு வகைகள் **(b) சிறுதானியங்கள்** (c) எண்ணெய் வித்துக்கள் (d) நெல்

201) 2011ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் எழுத்தறிவு சதவீதம்_______

(a) 80.32 (b) 62.33 (c) 73.45 **(d) 80.09**

202) தமிழ்நாட்டின் மிகப் பெரிய நீர்மின்சக்தி திட்டம்__________

(a) மேட்டூர் (b) பாபநாசம் (c) சாத்தனூர் (d) துங்கபத்ரா

203) தமிழ்நாட்டிலுள்ள பெரிய மற்றும் சிறிய துறைமுகங்களின் எண்ணிக்கை_______

(a) 3 மற்றும் 15 (b) 4 மற்றும் 16 (c) 3 மற்றும் 16 (d) 4 மற்றும் 15

204) இந்தியாவின் அயலுறவுக் கொள்கையை வடிவமைப்பதில் எந்த அமைச்சர் முக்கிய பங்கு வகிக்கிறார்?

(a) பாதுகாப்பு அமைச்சர் (b) பிரதம அமைச்சர் **(c) வெளிவிவகாரங்கள் அமைச்சர்**
(d) உள்துறை அமைச்சர்

205) எந்த இரு நாடுகளுக்கிடையே பஞ்சீல ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது?

(a) இந்தியா மற்றும் நேபாளம் (b) இந்தியா மற்றும் பாகிஸ்தான்
(c) இந்தியா மற்றும் சீனா (d) இந்தியா மற்றும் ஸ்ரீலங்கா

206) இந்திய வெளியுறவுக் கொள்கையை ஏற்றுக்கொண்டு வழிநடத்தும் இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு எது?

(a) சட்டப்பிரிவு 50 **(b) சட்டப்பிரிவு 51** (c) சட்டப்பிரிவு 52 (d) சட்டப்பிரிவு 53

207) இன ஒதுக்கல் கொள்கை என்பது

(a) ஒரு சர்வதேச சங்கம் (b) இராஜதந்திரம் **(c) ஒரு இனப் பாகுபாட்டுக் கொள்கை**
(d) மேற்கூறியவைகளில் எதுவுமில்லை

208) 1954இல் இந்தியா மற்றும் சீனாவால் கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தம் இது தொடர்பானது.

(a) வியாபாரம் மற்றும் வணிகம் (b) சாதாரண உறவுகளை மீட்டெடுப்பது
(c) கலாச்சார பரிமாற்றங்கள் **(d) ஐந்து கொள்கைகளுடன் இணைந்திருத்தல்**

209) நமது வெளியுறவுக் கொள்கையுடன் தொடர்பு இல்லாதது எது?

(a) உலக ஒத்துழைப்பு (b) உலக அமைதி (c) இனச் சமத்துவம் **(d) காலனித்துவம்**

210) கீழ்க்கண்டவைகளில் அணிசேரா இயக்கத்தில் நிறுவன உறுப்பினர் அல்லாத நாடு எது?

(a) யுகோஸ்லாவியா (b) இந்தோனேசியா (c) எகிப்து **(d) பாகிஸ்தான்**

211) பொருந்தாத ஒன்றினைக் கண்டுபிடி

(a) சமூக நலம் (b) சுகாதாரம் **(c) ராஜதந்திரம்** (d) உள்நாட்டு விவகாரங்கள்

212) அணிசேராமை என்பதன் பொருள்

(a) நடுநிலைமை வகிப்பது
(b) தன்னிச்சையாகப் பிரச்சனைகளுக்கு முடிவு எடுக்கும் சுதந்திரம்
(c) ராணுவமயமின்மை (d) மேற்கூறியவற்றில் எதுவும் இல்லை

www.Padasalai.Net

213) ராணுவம் சாராத பிரச்சனைகள் என்பது

(a) ஆற்றல் பாதுகாப்பு (b) நீர் பாதுகாப்பு (c) தொற்றுநோய்கள் **(d) இவை அனைத்தும்**

214) மக்மகான் எல்லைக்கோடு எந்த இரு நாடுகளுக்கும் இடையே உள்ள எல்லை ஆகும்?

(a) பர்மா - இந்தியா (b) இந்தியா - நேபாளம் **(c) இந்தியா – சீனா** (d) இந்தியா - பூடான்

215) இந்தியா பின்வருவனவற்றுள் எந்த அமைப்பில் உறுப்பினராக இல்லை?
அ) ஜி 20
ஆ) ஏசியான் (ASEAN)
ஆ) சார்க் (SAARC)
ஈ) பிரிக்ஸ் (BRICS)
சரியானவற்றை தேர்ந்தெடு

(a) 4 மட்டும் (b) 2 மற்றும் 4 (c) 2, 4 மற்றும் 1 (d) 1, 2 மற்றும் 3

216) ஒபெக் (OPEC) என்பது

(a) சர்வதேச காப்பீட்டு நிறுவனம் (b) ஒரு சர்வதேச விளையாட்டுக் கழகம்
(c) எண்ணெய் ஏற்றுமதி நிறுவனங்களின் அமைப்பு (d) ஒரு சர்வதேச நிறுவனம்

217) இந்தியா தனது மிக நீண்ட நில எல்லையை எந்த நாட்டோடு பகிர்ந்து கொள்கிறது?

(a) வங்காளதேசம் (b) மியான்மர் (c) ஆப்கானிஸ்தான் (d) சீனா

218) பின்வருவனவற்றைப் பொருத்தி கீழே கொடுக்கப்பட்ட குறியீடுகளிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்
i) சல்மா அணை - 1. வங்காளதேசம்
ii) பராக்கா ஒப்பந்தம் - 2. நேபாளம்

iii) சுக்கா நீர்மின்சக்தி திட்டம்- 3. ஆப்கானிஸ்தான்
iv) சாரதா கூட்டு மின்சக்தித் திட்டம் - 4. பூடான்

(a) 3 1 4 2 (b) 3 1 2 4 (c) 3 4 1 2 (d) 4 3 2 1

219) எத்தனை நாடுகள் இந்தியாவுடன் தன் எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றன?

(a) 5 (b) 6 **(c) 7** (d) 8

220) எந்த இரண்டு தீவுநாடுகள் இந்தியாவின் அண்டை நாடுகள் ஆகும் ?

(a) இலங்கை மற்றும் அந்தமான் தீவுகள் (b) மாலத்தீவு மற்றும் லட்சத் தீவுகள்
(c) மாலத்தீவு மற்றும் நிக்கோபார் தீவு **(d) இலங்கை மற்றும் மாலத்தீவு**

221) எந்த இந்திய மாநிலம் மூன்று நாடுகளால் சூழப்பட்டுள்ளது?

(a) அருணாச்சலப்பிரதேசம் (b) மேகாலயா (c) மிசோரம் (d) சிக்கிம்

222) எத்தனை மாநிலங்கள் நேபாளத்துடன் தங்கள் எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றன?

(a) ஐந்து (b) நான்கு (c) மூன்று (d) இரண்டு

223) புதிதாக சுதந்திரமடைந்த பாகிஸ்தானுக்கான எல்லைகளை வகுத்தவர்

(a) மவுண்ட்பேட்டன் பிரபு **(b) சர் சிறில் ராட்க்ளிஃப்** (c) கிளமன்ட் அட்லி
(d) மேற்கூறிய ஒருவருமில்லை

224) ___________ என்பது விரும்பிய அளவுகளில் உணவு இருப்பு இருப்பது, உள்நாட்டு உற்பத்தியில் இருப்பில் மாற்றங்கள் மற்றும் இறக்குமதி பற்றிய ஒரு செயல்பாடாகும்.

(a) உணவு கிடைப்பது (b) உணவுக்கான அணுகல் (c) உணவின் முழு ஈடுபாடு
(d) இவை ஏதுமில்லை

225) தாங்கியிருப்பு என்பது உணவுப் பங்கு தானியங்கள் அதாவது கோதுமை மற்றும் அரிசியை___________ மூலம் அரசாங்கம் கொள்முதல் செய்கிறது.

(a) FCI (b) நுகர்வோர் கூட்டுறவு (c) ICICI (d) IFCI

www.Padasalai.Net

226) எது சரியானது?
i) HYV – அதிக விளைச்சல் தரும் வகைகள்
ii) MSP – குறைந்தபட்ச ஆதரவு விலை
iii) PDS – பொது விநியோக முறை
iv) FCI – இந்திய உணவுக் கழகம்

(a) i மற்றும் ii சரியானவை (b) iii மற்றும் iv சரியானவை (c) ii மற்றும் iii சரியானவை
(d) மேற்கூறிய அனைத்தும் சரி

227) நீட்டிக்கப்பட்ட உதவி பொதுச் சட்டம் 480 ஐ கொண்டு வந்த நாடு______

(a) அமெரிக்கா (b) இந்தியா (c) சிங்கப்பூர் (d) இங்கிலாந்து

228) _____________இந்தியாவில் தோன்றியதால் உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற வழி வகுத்தது.

(a) நீலப் புரட்சி (b) வெள்ளைப் புரட்சி **(c) பசுமைப் புரட்சி** (d) சாம்பல் புரட்சி

229) உலகளாவிய பொது வழங்கல் முறையை ஏற்றுக் கொண்ட ஒரே மாநிலம்__________

(a) கேரளா (b) ஆந்திரபிரதேசம் **(c) தமிழ்நாடு** (d) கர்நாடகா

230) _________ என்பது உடல் நலம் மற்றும் வளர்ச்சிக்குத் தேவையான உணவை வழங்கும் அல்லது பெறும் செயல்முறையாகும்.

(a) ஆரோக்கியம் **(b) ஊட்டச்சத்து** (c) சுகாதாரம் (d) பாதுகாப்பு

231) தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம் ____________இல் தொடங்கப்பட்ட து.

(a) 1980 (b) 1975 (c) 1955 (d) 1985

232) ___________நிலை என்பது மக்கள் தொகை மற்றும் மனிதவளர்ச்சியின் ஒட்டு மொத்த நல்வாழ்வின் குறியீடுகளில் ஒன்று.

(a) ஆரோக்கியம் (b) ஊட்டச்சத்து (c) பொருளாதாரம் (d) செல்வம்

233) தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்டங்கள்___________ சேவையை இலவசமாக அறிமுகப்படுத்தியுள்ளது.

(a) 106 ஆம்புலன்ஸ் **(b) 108 ஆம்புலன்ஸ்** (c) 107 ஆம்புலன்ஸ் (d) 105 ஆம்புலன்ஸ்

234) இந்தியாவிலுள்ள மூன்று நிலைகளான அரசுகள்

(a) மைய, மாநில மற்றும் உள்ளாட்சி (b) மைய, மாநில மற்றும் கிராம
(c) மைய, நகராட்சி மற்றும் பஞ்சாயத்து (d) ஏதுமில்லை

235) இந்தியாவில் உள்ள வரிகள்

(a) நேர்முக வரிகள் (b) மறைமுக வரிகள் **(c) இரண்டும் (அ) மற்றும் (ஆ)**
(d) ஏதுமில்லை

236) வளர்ச்சிக் கொள்கையில் அரசாங்கத்தின் பங்கு எது ?

(a) பாதுகாப்பு (b) வெளிநாட்டுக் கொள்கை (c) பொருளாதாரத்தை கட்டுப்படுத்தல்
(d) மேற்கூறிய அனைத்தும்

237) இந்தியாவில் தனி நபர்களின் மேல் விதிக்கப்படுகின்ற பொதுவான மற்றும் மிக முக்கியமான வரி

(a) சேவை வரி (b) கலால் வரி **(c) விற்பனை வரி** (d) மத்திய விற்பனை வரி

238) ஒரு நாடு, ஒரே மாதிரியான வரி என்பதை எந்த வரி உறுதிப்படுத்துகிறது?

(a) மதிப்புக் கூட்டு வரி (VAT) (b) வருமான வரி **(c) பண்டங்கள் மற்றும் பணிகள் வரி**
(d) விற்பனை வரி

239) இந்தியாவில் வருமான வரிச்சட்டம் முதன் முதலில்__________ ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

(a) 1860 (b) 1870 (c) 1880 (d) 1850

240) சொத்து உரிமையிலிருந்து பெறப்பட்ட நன்மைகளுக்கு ___ வரி விதிக்கப்படுகிறது.

www.Padasalai.Net

(a) வருமான வரி **(b) சொத்து வரி** (c) நிறுவன வரி (d) கலால் வரி

241) கருப்பு பணத்திற்கான காரணங்கள் என கண்டறியப்பட்ட அடையாளம் எவை ?

(a) பண்டங்களின் பற்றாக்குறை (b) அதிக வரி விகிதம் (c) கடத்தல்
(d) மேற்கூறிய அனைத்தும்

242) வரி ஏய்ப்பு என்பது சட்டவிரோதமானது__________ மூலம் வரி ஏய்ப்பு மேற்கொள்ளப்படுகிறது

(a) தனி நபர்கள் (b) பெரு நிறுவனங்கள் (c) அறக்கட்டளைகள்
(d) மேற்கூறிய அனைத்தும்

243) கட்டணங்கள் என்பது

(a) கட்டணங்கள் (Fees) மற்றும் அபராதங்கள் (b) அபராதங்கள் மற்றும் பறிமுதல்கள்
(c) எதுவுமில்லை **(d) (அ) மற்றும் (ஆ)**

244) ஆசியாவின் டெட்ராய்ட் என அழைக்கப்படுவது ________.

(a) தூத்துக்குடி (b) கோயம்புத்தூர் **(c) சென்னை** (d) மதுரை

245) குழாய்கள் மற்றும் நீரிறைக்கும் இயந்திரம் பெருமளவில் உற்பத்தி செய்யப்படுவது ________.

(a) சேலம் **(b) கோயம்புத்தூர்** (c) சென்னை (d) தருமபுரி

246) தூத்துக்குடி ________ என அழைக்கப்படுகிறது.

(a) இந்தியாவின் நுழைவாயில் **(b) தமிழ்நாட்டின் நுழைவாயில்** (c) குழாய் நகரம்
(d) மேற்கண்ட எதுவுமில்லை

247) _______ என்பது ஒரு நாட்டின் வளர்ச்சியில் முக்கிய அம்சமாகும்.

(a) வேளாண்மை **(b) தொழில்** (c) இரயில்வே (d) மேற்கண்ட எதுவுமில்லை

248) திருப்பூர் ________ தொழிலுக்குப் பெயர்பெற்றது.

(a) தோல் பதனிடுதல் (b) பூட்டு தயாரித்தல் **(c) பின்னலாடை தயாரித்தல்**
(d) வேளாண் பதப்படுத்துதல்

249) ஆம்பூர் மற்றும் வாணியம்பாடியுடன் ________ ல் தோல் பொருள் ஏற்றுமதிக்கான மையம் உள்ளது.

(a) சென்னை (b) சிவகாசி (c) கோயம்புத்தூர் (d) மதுரை

250) Information Technology (IT) என்ற சொல்லுக்கு _______ எனப் பொருள்

(a) இந்திய தொழில்நுட்பம் **(b) தகவல் தொழில்நுட்பம்** (c) தொழில்நுட்ப நிறுவனம்
(d) முனைவு தொழில்நுட்பம்

251) _______ இல் ஒரு வெற்றிகரமான தொழில்துறை தொகுப்பு முற்றிலும் தமிழ்நாட்டால் உருவாக்கப்பட்டது.

(a) ஓசூர் (b) திண்டுக்கல் (c) கோவில்பட்டி (d) திருநெல்வேலி

252) SIPCOT உருவாக்கப்பட்ட ஆண்டு____ .

(a) 1972 (b) 1976 (c) 1978 **(d) 1971**

253) கீழ்க்கண்டவற்றுள் தமிழ்நாடு தொழில்துறை வளர்ச்சி முகமை எவை?

(a) SIPCOT (b) TANSIDCO (c) TIDCO **(d) All of these**

254) ஜெர்மனியில் ஹிட்லரின் எழுச்சிக்கு இட்டுச்சென்ற சூழ்நிலைகளைக் கண்டறிபக.

Answer : ஹிட்லர் ஜெர்மனியின் அதிகாரத்தைக் கைப்பற்றுதல்:
1. 1919ஆம் ஆண்டு ஏழு நபர்களைக் கொண்ட ஒரு குழுவானது ஜெர்மன் உழைப்பாளர் கட்சி எனப்படும் நாசிசக் கட்சியை உருவாக்கியது. ஹிட்லரும் அவர்களுள் ஒருவராக இருந்தார்.
2. அவர் முதல் உலகப்போரின்போது பவேரியாவின் படையில் பணியாற்றினார்.
3. 1923 இல் பவேரியாவில் அதிகாரத்தைக் கைப்பற்ற ஹிட்லர் முயற்சி மேற்கொண்டார்.
4. நியுனிச் நகரில் முன்கூட்டியே திட்டமிடப்படாமல் அவர் மேற்கொண்ட தேசியப்புரட்சி அவரைச் சிறையில் தள்ளியது.
5. சிறையில் இருந்தபோது தனது சுயசரிதை நூலான மெயின் காம்ப் (Mein Kampf - எனது போராட்டம்) எனும் நூலை எழுதினார்.
6. 1932 இல் நடைபெற்ற குடியரசுத் தலைவர் தேர்தலில் தவறான வழியில் ஜெர்மனியின் அதிகாரத்தைக் கைப்பற்றினார்.

ஹிட்லரின் நாசிச ஆட்சி:
1. ஜெர்மனியில் குடியரசு ஆட்சி கவிழ்ந்ததின் விளைவாகத் தொழிலதிபர்களும், வங்கியாளர்களும் குடியாட்சிக் கட்சியினரும் ஹிட்லரை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையில் 1933 இல் ஹட்லரை சான்சிலராக (முக்கிய அமைச்சர்) பதவியில் அமர்த்தும்படி குடியரசுத் தலைவர் வான் ஹின்டென்பர்க்கை வற்புறுத்தினர்.
2. மூன்றாவது ரெய்க் (குடியரசு) என்று அழைக்கப்பட்ட ஹிட்லரின் நாஜிஅரசு ஜெர்மனியில் நிறுவப்பட்டிருந்த பாராளுமன்ற ஜனநாயக அரசை முடிவுக்குக் கொண்டுவந்தது.

ஹிட்லர் மேற்கொண்ட ஒடுக்குமுறை நடவடிக்கைகள்:
1. ஹிட்லர் வெய்மர் குடியரசின் கொடிக்குப் பதிலாக ஸ்வஸ்திக் சின்னம் பொறிக்கப்பட்ட தேசிய சோசியலிசக் கட்சியின் கொடியை அறிமுகம் செய்தார்.
2. நாசிச கட்சியைத்தவிர பிறகட்சிகள் அனைத்தும் சட்டத்திற்குப் புறம்பானவை என்று அறிவிக்கப்பட்டது.
3. ஹிட்லர் இளைஞர் அணியும், தொழிலாளர் அமைப்பும் நிறுவப்பட்டன.
4. தொழிற்சங்கங்கள் ஒழிக்கப்பட்டன.
5. பத்திரிக்கைகள், அரங்குகள், திரைப்படங்கள், வானொலி, கல்வி ஆகிய அனைத்தும் அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டன.
6. யூதர்களுக்கு எதிராக ஒடுக்குமுறைக் கொள்கை பின்பற்றப்பட்டது.
7. 1934 ஆம் ஆண்டு ஹின்டென்பர்க் மறைவிற்குப்பின் சான்சிலராக இருந்த ஹிட்லர் குடியரசுத் தலைவராகவும் ராணுவத்தின் தலைமைத் தளபதியாகவும் பொறுப்பேற்றார்.

255) அடால்ப் ஹிட்லரின் எழுச்சி மற்றும் வீழ்ச்சி குறித்து ஒரு கட்டுரை வரையவும்.

www.Padasalai.Net

Answer : அடால்ப் ஹிட்லரின் எழுச்சி:

1. ஹிட்லர் தனது வல்லமை மிக்க சொற்பொழிவாற்றும் திறமையாலும் உணர்ச்சி மிக்கப் பேச்சுக்களாலும் ஜெர்மனியை அதன் ராணுவப் புகழ்மிக்க முந்தைய காலத்திற்கு மீண்டும் அழைத்துச் செல்வதாகவும் கூறி மக்களை தன்பக்கம் ஈர்த்தார்.
2. தேசிய சமதர்மவாதிகள் கட்சியை நிறுவினார். இது நாசிக்கட்சி என்று அழைக்கப்பட்டது.
3. இரண்டு அடிப்படைக் கருத்துகளை அடித்தளமாகக் கொண்டு ஹிட்லர் மக்களின் ஆதரவைத் திரட்டினார்.
4. ஒன்று ஜெர்மனியரே சுத்தமான ஆரிய இனத்தவர் எனும் இனஉயர்வு மனப்பாங்கு மற்றொன்று மிக ஆழமான யூத வெறுப்பு ஆகும்.
5. வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துகளுக்கு நேரெதிராக ஹிட்லர் ஜெர்மனியின் ராணுவத்தையும் ஆயுதங்களையும் அதிகரிக்கத் துவங்கினார்.
6. ஆயுதப் படைகளுக்கான ஆள் சேர்ப்பு, ராணுவத்திற்குத் தேவைப்படும் ஆயுதங்களையும் ஏனைய இயந்திரங்களையும் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் நிறுவுதல் போன்றவற்றால் ஜெர்மனியின் பொருளாதாரம் புத்துயிர் பெற்றதோடு வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சனையும் ஹிட்லரால் தீர்த்து வைக்கப்பட்டது.
7. ஹிட்லர் படைநீக்கம் செய்யப்பட்ட மண்டலமாகக் கருதப்பட்ட ரைன்லாந்தின் மீது 1936 இல் படையெடுத்தார்.
8. ஜெர்மனி, இத்தாலி மற்றும் ஜப்பானுடன் இணைந்து ரோம் - பெர்லின் - டோக்கியோ அச்சு உடன்படிக்கை செய்து கொண்டது.
9. ஹிட்லர் 1938 இல் ஆஸ்திரியா மற்றும் செக்கோஸ்லாவாகியா நாடுகளைக் கைப்பற்றினார்.
10. 1939 ல் போலந்தைத் தாக்கி அதையும் கைப்பற்றினார்.

ஹிட்லரின் வீழ்ச்சி:

1. இரண்டாம் உலகப்போரின் தொடக்கத்தில் பல வெற்றிகளைப் பெற்றிருந்தபோதிலும் ஜெர்மனி 1940 இல் நடைபெற்ற பிரிட்டன் போரின் இறுதியில் தோல்வியடைந்தது.
2. 1941 ஆம் ஆண்டு ரஷ்யாவின் மீது படையெடுத்த ஜெர்மனி மின்னல் வேகத்தாக்குதலால் தொடக்கத்தில் வெற்றி பெற்றது. ஆனால் இறுதியில் சோவியத் படைகளின் வலுவான எதிர்ப்பு, ரஷ்யாவின் கடுமையான
3. குளிர் ஆகிய காரணங்களால் தோல்வியுற்றது.
4. 1942 இல் நடைபெற்ற போரிலும் ஹிட்லரின் நம்பிக்கைக்கு எதிராக ரஷ்யமக்கள் சோவியத் அரசுக்கு ஆதரவு அளித்ததால் ஜெர்மனி படைகள் மேலும் முன்னேறுவது தடுத்து நிறுத்தப்பட்டது.
5. 1942 இல் நடைபெற்ற எல் அலாமெய்ன் போரில் ஜெர்மனி நேசநாட்டுப் படைகளால் தோற்கடிக்கப்பட்டது.
6. 1943 இல் இத்தாலி சரணடைந்தது.
7. 1945 இல் முசோலினி இத்தாலிய கிளர்ச்சியாளர்களால் கொல்லப்பட்டார்.
8. இத்தொடர் தோல்விகளால் ஹிட்லர் 1945 ஏப்ரலில் தற்கொலை செய்து கொண்டார்.

www.Padasalai.Net

256) இரண்டாம் உலகப்போரின் விளைவுகளை ஆய்வு செய்க.

Answer : உலகம் இரு அணிகளாகப் பிரிதல்:

1. வல்லரசுகள் தலைமையிலான அணிகளைக் கொண்ட உலகம் இரு துருவங்களானது.
2. ஒரு அணி கம்யூனிச எதிர்ப்புக் கருத்துக்களைக் கொண்ட அமெரிக்காவால் தலைமையேற்கப்பட்டது.
3. மற்றொரு அணிக்கு சோவியத் யூனியன் தலைமை தாங்கியது.
4. கம்யூனிசநாடுகள், கம்யூனிசமல்லாத நாடுகள் என ஐரோப்பா இரண்டாகப் பிரிக்கப்பட்டது. .

அணு ஆயுதப்பரவல்:

1. அமெரிக்க ஐக்கிய நாடுகளும் சோவியத்யூனியனும் அணுஆயுதங்களை அதிகரிக்கும் போட்டியில் இறங்கி, ஆயுதங்களைப் பெருக்கிக் குவித்தன.
2. பல நாடுகளில் ராணுவத்திற்கான செலவினங்கள் உச்சத்தை எட்டின.

பன்னாட்டு முகமைகள்:

பல பன்னாட்டு முகமைகள் குறிப்பாக, ஐக்கிய நாடுகள் சபை, உலகவங்கி, பன்னாட்டு நிதியம் போன்ற அமைப்புகள் உருவாக்கப்பட்டன. இவை பெரிய மற்றும் சிறிய நாடுகளுக்குப் பொது இடமாகத் திகழ்ந்தன.

சமூகப் பொருளாதார மாற்றங்கள்:

1. காலனி நீக்கச் செயல்பாட்டின் அடிப்படையில் காலனியாதிக்கச் சக்திகள் தங்களது காலனிகளுக்கு விடுதலை வழங்கவேண்டிய கட்டாயத்திற்குள்ளாயினர்.
2. அதில் இந்தியா முதலாவதாய் சுதந்திரம் பெற்றது.

257) ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பு, செயல்பாடுகளை ஆய்வு செய்க

Answer : ஐ.நா. சபை

1. அனைத்து நாடுகளிலும் அமைதி நிலவிடவும் மக்கள் தங்கள் வாழ்வை அச்சமின்றி சுதந்திரமாக வாழ்ந்திடவும் ஐக்கிய நாடுகள் சபை 1945 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.
2. ஐ.நா சபையின் சாசனத்தில் 1945 ஆம் ஆண்டு ஜூன் 26 ஆம் நாள் 51 நாடுகள் கையெழுத்திட்டன.
3. தற்போது ஐக்கிய நாடுகள் சபை 193 உறுப்பு நாடுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு நாடும் சிறியதோ அல்லது பெரியதோ, ஐக்கிய நாடுகள் சபையில் சமமான வாக்குகளைப் பெற்றுள்ளது.

பொதுச்சபை:

1. பொதுச்சபை எனும் அமைப்பில் ஒவ்வொரு நாடும் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றது.
2. இவ்வமைப்பு ஆண்டுக்கு ஒருமுறை கூடி நாடுகளின் நலன் சார்ந்த அம்சங்களும், முரண்பாடுகளுக்கான காரணங்களும் விவாதிக்கப்படுகின்றன.

பாதுகாப்பு சபை:

1. பாதுகாப்பு சபையானது 15 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.
2. அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் இச்சபையின் நிரந்தர உறுப்பினர்களாவர். ஏனைய பத்து உறுப்பினர்கள் சுழற்சி முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர்.
3. ஒவ்வொரு நிரந்தர உறுப்பினருக்கும், மறுப்பாணை அதிகாரம் (veto power) உண்டு. எந்த முடிவையும் இதன்மூலம் தடுத்துவிடலாம்.

நீர்வாக அமைப்பு:

1. ஐக்கிய நாடுகள் சபையின் செயல்பாட்டு அங்கமாகத் திகழ்வது செயலகம் ஆகும்.
2. இதன்பொதுச்செயலாளர், பொதுச்சபையில், பாதுகாப்புச் சடையின் பரிந்துரையின் படி தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
3. பொதுச் செயலாளர் தனது காபினெட் உறுப்பினர்கள், ஏனைய அதிகாரிகள் ஆகியோரின் துணையோடு ஐ.நா சபையை நடத்துகிறார்.
4. பன்னாட்டு நீதிமன்றம் ஐ.நா. சபையின் நீதி நிர்வாகக் கிளையாகும். இது நெதர்லாந்திலுள்ள தி ஹேக்கில் அமைந்துள்ளது.
5. பொருளாதார மற்றும் சமூகமன்றம் ஐ.நா.சபையின் ஐந்தாவது அங்கமாகும்.

ஐ.நா.ளின் இதா முக்கியத் துணைஅமைப்புகள்

www.Padasalai.Net

1. உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு - (FAO)
2. உலக சுகாதார நிறுவனம் - (WHO)
3. ஐ.நா. வின் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு அமைப்பு - (UNIISCO)
4. ஐ.நா. குழந்தைகள் நிதி நிறுவனம் - (UNICII)
5. ஐ.நா. வளர்ச்சி திட்டம் - (UNDP)

ஐ.நா வின் செயல்பாடுகள்:

1. கடந்த பல பத்தாண்டுகளில் உலகம் எதிர்கொண்ட, மாறிவரும் பிரச்சனைகளுக்கு ஏற்றவாறு ஐ.நா. சபை தனது செயல்பாடுகளை விரிவாக்கம் செய்துள்ளது.
2. 1960 களில் காலனியாதிக்க நீக்கம் முக்கியப் பிரச்சனையாகும்.
3. மனித உரிமைகள், அகதிகள் பிரச்சனை, பருவகால மாற்றம், பாலினச் சமத்துவம் ஆகியன தற்போது ஐ.நா. சபையின் செயல்பாட்டு வளையத்தினுள் உள்ளன.
4. ஐ.நா. வின் அமைதிப்படை உலகம் முழுவதிலும் மோதல்கள் அரங்கேறியப் பல்வேறு பகுதிகளில் அடிப்படை பணி செய்துள்ளது. அதன் முக்கியப் பகுதியாக உள்ள இந்திய ராணுவம் உலகின் பல்வேறு பகுதிகளில் பணியமர்த்தப்பட்டுள்ளது.

258) மீட்பியக்கத்தின் பங்களிப்பை சமயச் சீர்திருத்த இயக்கங்களின் பங்களிப்போடு ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் காட்டுக.

MARFIN JERSUN M.A,M.Sc,M.Phil
Atla Academy
the magical way of success
ISO 9001:2015 CERTIFIED INSTITUTE
தமிழகத்தில் எங்கிருந்து வேண்டுமானாலும் உங்கள் MOBILE வழியே படிக்கலாம்
9790072644 / 9626493231

Answer : (i) 19ம் நூற்றாண்டில் சமூக சமய சீர்திருத்த இயக்கங்கள் முக்கிய இடம் பெறுகின்றன
(ii) இந்திய மக்கள் மேற்கத்திய கருத்துக்களான பகுத்தறிதல் சமத்துவம், சுதந்திரம் மற்றும் மனிதாபிமானம் போன்ற கருத்துக்களால் மிகவும் கவரப்பட்டனர்
(iii) சமூக சமய சீர்திருத்த இயக்கங்கள் இந்தியாவின் மறுமலர்ச்சி இயக்கங்கள் என அழைக்கப்பட்டன
(iv) இந்தியச் சீர்திருத்தவாதிகளின் உடன்கட்டை ஏறுதல் (சதி, பெண் சிசுக்கொலை, குழந்தைத் திருமணம் அணைத்து வகையான கண்மூடித்தனமான மனநம்பிக்கைகள் போன்ற சமூகத் தீமைகளை கட்டுப்படுத்த உதவியது
(v) சமய இயக்கங்களாக ஆரிய சமாஜம், தியோபந்த் இயக்கம் மற்றும் இராமகிருஷ்ணா மிஷன் போன்றவைகளே பிரிட்டிஷ் இந்தியாவில் நடைபெற்றுக் கொண்டிருந்த மதமாற்ற நடவடிக்கைகளை நிறுத்த்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்டது. இதன் முக்கியக் குறிக்கோள் எதிர்மத மற்றம் என்பதாகும்

259) 19ஆம் நூற்றாண்டில் சீர்திருத்த இயக்கங்கள் நடைபெறுவதற்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகளை விவாதிக்கவும்.

Answer : 1. 19 ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் சமூகம் மற்றும் சமயத்தில் பல சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
2. மேலை நாட்டுக் கல்வியினால் மக்கள் மேற்கத்திய கருத்துக்களான பகுத்தறிதல், சமத்துவம், சுதந்திரம், தேசியம் மற்றும் மனிதாபிமானம் போன்ற கருத்துகளால் மிகவும் கவரப்பட்டனர்.
3. இவர்கள் மீது கிறிஸ்துவ மதத்தின் தாக்கமும் ஏற்பட்டது.
4. இராஜா ராம்மோகன் ராய், பங்கிம் சந்திர சட்டர்ஜி, K.C.சென் போன்ற சீர்திருத்தவாதிகள் மக்களுக்கு உற்சாகமூட்டினர்.
5. மேற்கத்திய தாராள சிந்தனைகள் பரவியதும் சமூக பண்பாட்டு விழிப்புணர்வு தோன்றியது.
6. இந்திய பண்பாட்டில் இருந்த குறைகளை களைந்து, இந்தியாவின் பழம்பெரும் கலாச்சார புகழை மீண்டும் கொண்டுவர விரும்பினர்.
7. அவர்கள் பல்வேறு சமூக மற்றும் சமய சீர்திருத்த இயக்கங்களைத் தோற்றுவித்தனர்.
8. இதன் மூலம் இந்திய சமுதாயத்திலிருந்த குறைகளை களைய முற்பட்டனர்.
9. இத்தகைய சூழலில் தோன்றிய சமூக, சமய சீர்திருத்த இயக்கங்கள் இந்தியாவின் மறுமலர்ச்சி இயக்கங்கள் என அழைக்கப்பட்டன.

www.Padasalai.Net

260) தென்மேற்கு பருவக்காற்று குறித்து எழுதுக.

ATLA COMPUTER EDUCATION


Answer : காலம்:

இந்திய காலநிலையின் முக்கிய அம்சமான விளங்கும் தென்மேற்கு பருவக்காற்று காலம் ஜூன் முதல் செப்டம்பர் வரையாகும்.

பருவக்காற்றின் துவக்கம்:

1. இப்பருவக்காற்று பொதுவாக ஜுன் முதல் வாரத்தில் இந்தியாவின் தென்பகுதியில் தொடங்கி கொங்கணக் கடற்கரைக்கு ஜுன் இரண்டாம் வாரத்திலும், அனைத்து இந்தியப் பகுதிகளுக்கும் ஜுலை 15 லும் முன்னேறுகிறது.
2. இப்பருவக் காற்றின் இடி மற்றும் மின்னலுடன் கூடிய துவக்கம் "பருவமழை வெடிப்பு" எனப்படுகிறது. இது இந்தியாவின் வெப்பநிலையை பெருமளவில் குறைக்கிறது.
3. இக்காற்று இந்தியாவின் தென்முனையை அடையும் பொழுது இரண்டு கிளைகளாகப் பிரிகிறது. அவை அரபிக்கடல் கிளை மற்றும் வங்காளவிரிகுடா கிளை என்பனவாகும்.

அரபிக்கடல் கிளை;

1. தென்மேற்கு பருவக்காற்றின் அரபிக்கடல் கிளை மேற்குத் தொடர்ச்சி மலையின் மேற்குச் சரிவுகளில் மோதி பலத்த மழைப் பொழிவைப் தருகிறது.
2. இக்கிளையானது வடக்கு நோக்கி நகர்ந்து இமயமலையால் தடுக்கப்பட்டு வட இந்தியா முழுவதும் கனமழையைக் கொடுக்கிறது.
3. ஆரவல்லி மலைத் தொடர் இக்காற்று வீசும் திசைக்கு இணையாக அமைந்துள்ளதால் இராஜஸ்தான் மற்றும் வட இந்தியாவின் மேற்குப் பகுதிக்கு மழைப்பொழிவை தருவதில்லை.

வங்காள விரிகுடா கிளை:

1. வங்காள விரிகுடா கிளை, வடகிழக்கு இந்தியா மற்றும் மியான்மரை நோக்கி வீசுகிறது.
2. இது காசி, காரோ, ஜெயந்தியா குன்றுகளால் தடுக்கப்பட்டு மேகாலயாவில் உள்ள மௌசின்ராமில் மிக கனமழையைத் தருகிறது.
3. பிறகு இக்காற்று கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி நகரும் போது மழைப்பொழிவின் அளவு குறைந்து கொண்டே செல்கிறது.
4. இந்தியாவின் ஒட்டுமொத்த மழைப்பொழிவில் 75% மழைப்பொழிவானது இப்பருவக்காற்று காலத்தில் கிடைக்கிறது.
5. தமிழ்நாடு மழை மறைவுப் பகுதியில் அமைந்துள்ளதால் குறைவான மழையைப் பெறுகிறது.

261) இந்திய காடுகள் பற்றி விவரிக்கவும்

www.Padasalai.Net

Answer : அயன மண்டல பசுமைமாறாக் காடுகள்:
1. ஆண்டு மழைப்பொழிவு 200 செ.மீட்டருக்கும் மேலும் ஆண்டு வெப்பநிலை 22 °C க்கு அதிகமாகவும் உள்ள பகுதிகளில் இவ்வகைக் காடுகள் காணப்படுகின்றன.
2. கேரளா, கர்நாடகா, மகாராஷ்ட்ரா, அந்தமான் நிக்கோபர் தீவுகள், அசாம், மேற்குவங்காளம், நாகலாந்து, திரிபுரா, மிசோரம், மணிப்பூர் மற்றும் மேகாலயா ஆகிய பகுதிகளில் இவ்வகைக் காடுகள் காணப்படுகின்றன.
3. இரப்பர், எபனி, ரோஸ்மரம், தென்னை, மூங்கில், சின்கோனா, சிடார் போன்ற மரங்கள் இங்கு காணப்படுகின்றன.

அயன மண்டல இலையுதிர்க் காடுகள்:
1. ஆண்டு சராசரி மழைப்பொழிவு சுமார் 100 செ.மீ முதல் 200 செ.மீ வரையுள்ள பகுதிகளில் இக்காடுகள் காணப்படுகின்றன.
2. இக்காடுகளிலுள்ள மரங்கள் வசந்த காலத்திலும் கோடைகாலத்தின் முற்பகுதியிலும் வறட்சியின் காரணமாக இலைகளை உதிர்த்து விடுகின்றன. எனவே இக்காடுகள் இலையுதிர்க் காடுகள் என அழைக்கப்படுகின்றன.
3. இமயமலைக்கு அருகில் உள்ள பஞ்சாப் முதல் அசாம் வரையிலான பகுதிகள் வடசமவெளிகள், மத்திய இந்தியா மற்றும் தென் இந்தியா போன்ற பகுதிகளில் இக்காடுகள் காணப்படுகின்றன.
4. தேக்கு, சால், சந்தனமரம், ரோஸ்மரம், குசம், மாகு, பாலாங், ஆம்லா, மூங்கில், சிசம் மற்றும் படாக் போன்ற பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த மரங்கள் இக்காடுகளில் வளர்கின்றன.

அயன மண்டல வறண்ட காடுகள்:
1. ஆண்டு மழைப்பொழிவு 50 செ.மீ முதல் 100 செ.மீ வரை உள்ள பகுதிகளில் அயன மண்டல வறண்ட காடுகள் காணப்படுகின்றன. இவை ஒரு இடைநிலை வகைக் காடுகளாகும்.
2. இக்காடுகளில் இலுப்பை, ஆலமரம், பலா, மஞ்சக்கடம்பு, கருவேலம் மற்றும் மூங்கில் ஆகியவை முக்கிய மரவகைகளாகும்.

முட்புதர் காடுகள்:
1. பாலைவன மற்றும் அரைப் பாலைவனத் தாவரங்களை "முட்புதர் காடுகள்" என்றும் அழைப்பர்.
2. இவை ஆண்டு சராசரி மழைப்பொழிவு 50 செ.மீட்டருக்கு குறைவாகவும், அதிக வெப்பமும் குறைவான ஈரப்பதமும் கொண்ட பகுதிகளில் காணப்படுகின்றன.
3. கருவேல மரம், ஈச்சமரம் போன்ற மரங்கள் இக்காடுகளில் வளர்கின்றன.

www.Padasalai.Net

மலைக்காடுகள்:
1. உயரம் மற்றும் மழையளவின் அடிப்படையில் இதனை பருவக்காற்று காடுகள் என்று அழைக்கலாம்.
2. கிழக்கு இமயமலைக் காடுகள், வட கிழக்கு இந்திய மாநிலங்களிலுள்ள இமயமலைச் சரிவுகளில் காணப்படுகின்றன. இவை 200 செ.மீட்டருக்கும் அதிகமான மழைப் பொழிவைப் பெறுகின்றன.
3. மேலும் இவை பசுமை மாறாக் காடுகள் வகையை சார்ந்தவை.
4. மேற்கு இமயமலைக்காடுகள் ஜம்மு-காஷ்மீர், இமாச்சல பிரதேசம், உத்ரகாண்ட் போன்ற மாநிலங்களில்
5. மிதமான மழைப்பொழிவுள்ள பகுதிகளில் காணப்படுகின்றன.

அல்பைன் காடுகள்:
1. சுமார் 2400 மீட்டருக்கு மேல் உள்ள இமயமலைகளின் உயரமான பகுதிகளில் இவ்வகைக் காடுகள் காணப்படுகின்றன,
2. இவை ஊசியிலை மரங்களைக் கொண்டுள்ளன. கிழக்கு இமயமலைப் பகுதியில் இவ்வகையான காடுகள் பரந்த அளவில் உள்ளன.

அலையாத்திக்காடுகள்:
1. இக்காடுகள் டெல்டாக்கள், பொங்கு முகங்கள் மற்றும் கடற்கழிமுகப் பகுதிகளில் காணப்படுகின்றன.
2. இவை ஓதங்களின் ஆதிக்கத்திற்கு உள்ளாவதால் சதுப்பு நிலக்காடுகள் மற்றும் டெல்டா காடுகள் எனவும் அழைக்கப்படுகின்றன.
3. இவ்வகை ஓதக்காடுகள் 'மாங்குரோவ் காடுகள்' என்றும் அழைக்கப்படுகின்றன.

262) இந்திய மண் வகைகளைக் குறிப்பிட்டு, மண்ணின் பண்புகள் மற்றும் பரவல் பற்றி விவரி.

Answer : இந்திய மண் வகைகள்:

1. வண்டல் மண்
2. கரிசல் மண்
3. செம்மண்
4. சரளை மண்
5. காடு மற்றும் மலைமண்
6. வறண்ட பாலை மண்
7. உப்பு மற்றும் காரமண்
8. களிமண் மற்றும் சதுப்பு நில மண்

வண்டல் மண்:

1. சிற்றோடைகள் மற்றும் ஆறுகளின் வேகம் குறையும் பொழுது படியவைத்தலால் உருவாகும் மண் வண்டல் மண் ஆகும்.
2. வெளிர் நிறம் கொண்ட புதிய வண்டல் காதர் என்றும், அடர் நிறம் கொண்ட பழைய வண்டல் பாங்கர் என்றும் அழைக்கப்படுகிறது.
3. இம்மண் கங்கை மற்றும் பிரம்மபுத்திரா ஆற்றுப்பள்ளத்தாக்குகள், உத்திரப் பிரதேசம், உத்திரகாண்ட் பஞ்சாப், ஹரியானா, மேற்கு வங்காளம் மற்றும் பீகார் மாநிலங்களிலுள்ள சமவெளிப் பகுதிகள் கிழக்கு கடற்கரையில் அமைந்துள்ள ஆற்று முகத்துவாரப்பகுதிகளில் காணப்படுகின்றது.

கரிசல் மண்:

1. தக்காணப் பகுதியிலுள்ள பசால்ட் பாறைகளிலிருந்து உருவானது கரிசல் மண் ஆகும்.
2. இம்மண் டைட்டானியம் மற்றும் இரும்பு தாதுக்களால் கருப்பு நிறமாக உள்ளது.
3. இலை மக்குகள் இம்மண்ணில் குறைவாக உள்ளன. ஈரமாக இருக்கும்போது சேறாகவும், ஈரப்பதத்தை நீண்ட நேரம் தக்கவைத்துக்கொள்ளும் தன்மையும் உடையது.
4. இம்மண், மகாராஷ்டிரா மற்றும் மாளவப் பீடபூமி, கத்தியவார் தீபகற்பம், தெலுங்கானா, ஆந்திரப்பிரதேத்தில் உள்ள ராயல சீமா மற்றும் கர்நாடகா மாநிலத்தின் வடபகுதி ஆகிய பகுதிகளில் காணப்படுகிறது.

செம்மண்:

1. பழமையான படிக பாறைகளான கிரானைட், நைஸ் போன்ற பாறைகள் சிதைவடைவதால் உருவாகிறது.
2. இரும்பு ஆக்ஸைடு அதிகமாகக் காணப்படுவதால் சிவப்பு நிறமாகக் காணப்படுகிறது.
3. தக்காண பீடபூமியின் கிழக்குப் பகுதி, கேரளா, தமிழ்நாடு, கர்நாடகா, ஜார்கண்ட் மற்றும் சோட்டா நாகபுரி பீடபூமி ஆகிய பகுதிகளில் காணப்படுகிறது.

www.Padasalai.Net

சரளை மண்:

1. வெப்பம் மற்றும் குளிர் அடுத்தடுத்து நிகழும் போது மண் சுவரல் காரணமாக இம்மண் உருவாகிறது.
2. இரும்பு மற்றும் அலுமினியத்தின் நீரேற்ற ஆக்ஸைடுகளால் உருவானது ஆகும்.
3. உயரமான மலைப்பகுதிகளில் அதிகமாக காணப்படுகிறது. பொதுவாக இது ஈரப்பதத்தை தக்கவைத்துக் கொள்வதில்லை.
4. அசாம் குன்றுகள், கேரளா மற்றும் கர்நாடகாவில் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரப் பகுதிகள், ஒடிசா மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் இவ்வகைமண் காணப்படுகிறது.

காடு மற்றும் மலை மண்:

1. பனிமழை, வெப்பநிலை வேறுபாடுகளால் பௌதீகச் சிதைவின் காரணமாக உருவாகிறது. மேலும் காலநிலைக்கு ஏற்ப இடத்திற்கு இடம் மாறுபடுகிறது.
2. இம்மண்ணில் மென்மையான மணல் மற்றும் பாறைத் துகள்கள் கலந்து காணப்படுகிறது.
3. ஜம்மு-காஷ்மீர், இமாச்சலபிரதேசம், உத்தரகாண்ட், சிக்கிம், போன்ற மாநிலங்களில் உள்ள ஊசியிலைக்காட்டு பகுதிகள், மேற்குத தொடாச்சி மலைகள் மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகள் ஆகிய பகுதிகளில் மலைமண் காணப்படுகிறது.

வறண்ட பாலை மண்:

1. வறண்ட கால நிலை, அதிக வெப்பம் காரணமாக ஆவியாதல் அதிகமாக இருப்பதால் மேல்மண் வறண்டு காணப்படுகிறது.
2. வெளிர் நிறம், குறைந்த இலை மக்குசத்து, மற்றும் குறைந்த ஈரப்பதம் உடைய மண் பாலை மண்ணாகும்.
3. இவ்வகை மண் இராஜஸ்தான், குஜராத்தின் வடபகுதி, பஞ்சாப் மாநிலத்தின் தென்பகுதி ஆகிய இடங்களில் காணப்படுகின்றது. .

உப்பு மற்றும் காரமண்:

1. இம்மண் சிதைக்கப்படாத பாறைகள் மற்றும் சிதைவுற்ற கனிமங்களை உடையது.
2. வடிகாலமைப்பு இல்லாமையால் நீர்பிடிப்புக் காரணமாக தீங்கு விளைவிக்கக்கூடிய உப்புகள்

மண்ணின் கீழ் அடுக்கிலிருந்து மேற்பரப்பிற்கு கடத்தப்படுகிறது. இதனால் உப்பு மற்றும் காரத்தன்மையுடன் காணப்படுகிறது.
3. ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம், பீகார், உத்திரப் பிரதேசம், ஹரியானா, பஞ்சாப், இராஜஸ்தான் மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களின் வறண்ட பகுதிகளில் இம்மண் காணப்படுகிறது.

களிமண் மற்றும் சதுப்பு நீலமண்:

1. அதிக மழையும் அதிக ஈரப்பதமும் கொண்ட பகுதிகளில். இம்மண் காணப்படுகிறது.
2. இம்மண் கருமை நிறம் மற்றும் அதிக காரத்தன்மையுடையது.
3. கேரளாவில் கோட்டயம் மற்றும் ஆலப்புழை மாவட்டங்கள், ஒடிசா, தமிழ்நாடு கடற்கரைப் பகுதிகள், மேற்கு வங்காளத்திலுள்ள சுந்தரவனப் பகுதிகள், பீகார், உத்தரகாண்ட் மாநிலத்தின் பல மாவட்டங்கள் ஆகியன இம்மண் காணப்படும் பகுதிகளாகும்.

263) தீவிர வேளாண்மை மற்றும் தோட்ட வேளாண்மையின் பண்புகளை வெளிக் கொணர்க.

Answer : தீவிர வேளாண்மை

1. தீவிர வேளாண்மை எனப்படுவது இயந்திரங்கள் மற்றும் பல்வேறு நவீன யுக்திகள் மூலம் உற்பத்தியை அதிகப்படுத்துவதாகும்.
2. சிறிய நிலத்தில் பூச்சிக் கொல்லிகள், களைக்கொல்லிகள் மற்றும் இரசாயன உரங்களை அதிகமாக பயன்படுத்தி அதிகபட்ச விளைச்சலை பெறுவது இதன் நோக்கமாகும்.
3. இந்த இயந்திரமயமாக்கல் மற்றும் தீவிரப்படுத்துதல் மூலம் சிறிய அளவில் வளர்க்கப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கையை குறிப்பாக பசுக்கள், பன்றிகள், கோழிகள் போன்ற விலங்குகளை பெரிய பண்ணைகள் மூலம் வளர்க்க வழிவகை செய்கிறது.
4. இந்தியாவில் பஞ்சாப், இராஜஸ்தானின் சில பகுதிகள், உத்திரபிரதேசம் மற்றும் மத்தியப் பிரதேசப் பகுதிகளில் இத்தீவிர வேளாண்மை முறை பின்பற்றப்படுகிறது.

தோட்டவேளாண்மை

1. தோட்ட வேளாண்மை மலைச்சரிவுகளில் பெரிய எஸ்டேட் பண்ணைகளாக நடைபெறுகிறது.
2. இந்தியாவின் வேளாண்பயிர்கள் காப்பி, தேயிலை, இரப்பர் மற்றும் வாசனைப் பொருட்கள் என்பனவாகும்.
3. இவை ஏற்றுமதி செய்யும் நோக்கத்துடன் பயிரிடப்படுகின்றன.
4. இப்பயிர்கள் அசாம், கேரளா, கர்நாடகா, தமிழ்நாடு, மேற்கு வங்காளம் மற்றும் அந்தமான் நிக்கோபர் தீவுகள் போன்ற பகுதிகளில் பயிரிடப்படுகின்றன.

www.Padasalai.Net

264) வேளாண்மை இல்லாத உலகத்தை கற்பனை செய்து பார்க்க முடியுமா?

Answer : 1. விவசாயம் இல்லாத உலகத்தை நினைத்துப் பார்க்கவே முடியாது. நூறு வருடத்திற்கு முன்னாடி, ஐந்துக்கு 4 பேர் விவசாயத்தில் இருந்தார்கள்.
2. தற்போது பணக்கார நாடுகளில் வேளாண்மை செய்கின்ற விவசாயிகள் மிகவும் குறைவு.
3. அதுமட்டும் அல்லாமல் அமெரிக்காவில் இன்று விவசாயிகளை விட அதிகமாக வழக்கறிஞர்கள் உள்ளனர்.
4. பண்ணையை விட அதிக உலர்நிலமே உள்ளது.
5. உலகத்தில் வேளாண்மை இல்லாமல் போய்விட்டால் அது உலக பொருளாதாரத்தையே மாற்றி அதன் கட்டமைப்பு மாறி உண்மையில் அது ஒரு தீவிரவாத அமைப்பாகிவிடும்.
6. 2007ல் இருந்து உலக சந்தையில் விவசாய பொருள்கள் நிரந்தர விலை இல்லாமல் மாறிகொண்டு இருக்கிறது.
7. கிராமப்புறங்களில் ஆற்றல் வாய்ந்த விவசாயம் கிராம மக்களின் வேலைவாய்ப்பை அதிகரிக்கும் இதனால் வறுமை சிறிது சிறிதாக நீக்கப்படும். ஆனால் இதன் முக்கியத்துவம் இல்லாததால் திருப்திபடுத்த முடியாமல் போய்விட்டது. ஏனென்றால் தொழிற்சாலை பெருகியதால் விவசாயம் தெரியாமல் போய்விட்டது. மக்கள் கிராமப்புறங்களில் இருந்து நகர்புறங்களுக்கு குடிபெயர ஆரம்பித்துவிட்டனர். இதைவிட ஒரு கொடுமை என்னவென்றால் வறட்சி மற்றும் வெள்ளத்தினால் பயிர்கள் அழிவதால் விவசாயிகள் தற்கொலை செய்கின்றனர். வேளாண்மை கடன் கொடுத்தால் மட்டும் போதாது அரசாங்கம் மேலும் கூட்டு நடவடிக்கை எடுத்தால் மட்டுமே விவசாயம் அழியாமல் இருக்கும்.

265) தென்னிந்தியாவில் நிலவும் நீர் பங்கீட்டு பிரச்சனைக்கு ஏதேனும் தீர்வை உங்களால் கொடுக்க முடியுமா?

Atla Academy
the magical way of success
ISO 9001:2015 CERTIFIED INSTITUTE
தமிழகத்தில் எங்கிருந்து வேண்டுமானாலும் உங்கள் MOBILE வழியே படிக்கலாம்

Answer : அ) நீர் நிலைகளை கட்டுவது
ஆ) நீர் நிலைகளை உயர்த்துவது
இ) குளங்களை தூர்வார்வது
1. நல்ல தரமான நீர் விநியோகங்களை அளிப்பதில் அரசாங்கம் அக்கறை காட்ட வேண்டும். அரசாங்கம் பரிசீலனை செய்து திறமையுள்ள தீர்பாய்வுகள், அமைப்புகள் மூலம் நீர் விநியோகம் செய்ய வேண்டும்.
2. நீர் நிலைகளில் வெள்ளத்தில் அதிகபடியான நீர் வெளியேறுவதை தடுக்க சம்பந்தப்பட்ட சமூகம், பொறுப்பு நீர் நிர்வாகிகள் மூலம் முரண்பாடுகளுக்கு தீர்வு வழங்கப்படுகிறது.
3. கடலில் கலக்கும் ஆற்றுநீரை புதிய நீர்தேக்கம் கட்டி அதன்மூலம் தீர்வு காணலாம்.
4. மழை நீரை சேமிக்க பல வழிகள் இருக்கிறது. இதற்காக பக்கத்து மாநிலங்களுடன் சண்டையிட தேவையில்லை.
5. அதிகமான மழைபெறும் இடங்களை கண்டறிந்து அதன் அருகே புதிய நீர் தேக்கங்களை அமைத்து நீரை சேமிக்க புதிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும்.
6. தமிழ்நாட்டில் குழு அமைத்து ஆய்வு செய்து புதிய நீர்தேக்க நிலைகளை கட்ட வேண்டும். இவையே நீர் வினியோகத்தின் காரணங்களாகும்.

266) இந்தியாவில் உள்ள பருத்தி நெசவாலைகளின் பரவல் பற்றி எழுதுக.

Answer : **இந்திய பருத்தி நெசவாலைகள்:**
1. பருத்தி நெசவாலைகள் நம் நாட்டின் அதிக வேலை வாய்ப்பை அளிக்கும் ஆதாரங்களில் ஒன்றாக உள்ளது.
2. தற்போது இந்தியா, பருத்தி உற்பத்தியில் உலகின் மூன்றாவது பெரிய நாடாகவும் தறிகளிலும், நூற்பு கருவிகளின் எண்ணிக்கையிலும் முதன்மையான நாடாகவும் உள்ளது.
3. தற்போது பருத்தி நெசவாலைகள் இந்தியாவின் மிகப்பெரிய நவீன தொழிலகப் பிரிவாக உள்ளது.

பருத்தி நெசவாலைகளின் பரவல்:
1. மகாராஷ்டிரம், குஜராத், மேற்கு வங்காளம், உத்திரப்பிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் பருத்தி நெசவாலைகள் செறிந்து காணப்படுகின்றன.
2. தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், கரூர், சென்னை, திருநெல்வேலி, மதுரை, தூத்துக்குடி, சேலம், மற்றும் விருதுநகர் ஆகியன முக்கிய நெசவாலை நகரங்களாகும்.

மும்பை-இந்தியாவின் மான்செஸ்டர்:

www.Padasalai.Net

1. மும்பை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் பருத்தி நெசவாலைகள் செறிந்து காணப்படுவதால் மும்பை, இந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படுகிறது.
2. இதற்குக் காரணம் மகாராஷ்டிரா மாநிலத்தில் காணப்படும் கரிசல் மண், ஈரப்பதக்கால நிலை, மும்பைத் துறைமுகம், எளிதில் கிடைக்கும் நீர்மின்சக்தி, சந்தை வசதி மற்றும் சிறந்த போக்குவரத்து வசதி ஆகியனவாகும்.

கோயம்புத்தூர்-தென்னிந்தியாவின் மான்செஸ்டர்
1. தமிழ்நாட்டிலுள்ள கோயம்புத்தூரில் அதிக எண்ணிக்கையிலான பருத்தி நெசவாலைகள் உள்ளன.
2. இதனால் கோயம்புத்தூர் தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என அழைக்கப்படுகிறது.

267) நகரமயமாக்கம் என்றால் என்ன? அதன் தாக்கங்களை விளக்குக

Answer : **நகரமயமாக்கம்**
1. கிராமப்புற சமுதாயம் நகர்ப்புற சமுதாயமாக மாற்றமடைவதேயே நகரமயமாக்கம் என்கிறோம்.
2. நகர்புற மக்கள் தொகை சதவிகிதத்தின் அடிப்படையிலேயே நகரமயமாக்கம் அளவிடப்படுகிறது.

நகரமயமாக்கலால் ஏற்படும் சிக்கல்கள்:
1. நகர விரிவாக்கத்தை ஏற்படுத்துகிறது.
2. நகர்ப்புறங்களில் மக்கள் நெருக்கடியைத் தோற்றுவிக்கிறது.
3. நகர்ப்புறங்களில் குடியிருப்புகளின் பற்றாக்குறையை உருவாக்குகிறது.
4. குடிசைப் பகுதிகள் தோன்றக் காரணமாக உள்ளது.
5. போக்குவரத்து நெரிசலை அதிகப்படுத்துகிறது.
6. குடிநீர் பற்றாக்குறையை ஏற்படுத்துகிறது.
7. வடிகால் பிரச்சனைகள் உண்டாகின்றன.
8. திடக்கழிவு மேலாண்மையை சிக்கலாக்குகிறது.
9. குற்றங்கள் அதிகரிக்கக் காரணமாகின்றன.

268) இந்தியாவின் மக்கள் பரவல் மற்றும் மக்களடர்த்தியை விவரிக்க.

Answer : மக்கள்தொகை பரவல்:

1. 'மக்கள் தொகைப் பரவல்' என்பது புவியின் மேற்பரப்பில் மக்கள் எவ்விடைவெளியில் உள்ளார்கள் என்பதைக் குறிக்கிறது. இப்பரவல் வளங்களின் பரவலுக்கேற்ப சீரற்று காணப்படுகிறது.
2. நிலப்பரப்பு, காலநிலை, மண், நீர் பரப்புகள், கனிம வளங்கள், தொழிலகங்கள், போக்குவரத்து மற்றும் நகரமயமாக்கல் ஆகியவை நாட்டின் மக்கள் தொகைப் பரவலைப் பாதிக்கும் முக்கியக் காரணிகளாகும்.
3. தொழில் மையங்கள் மற்றும் செழிப்பான வேளாண் பிரதேசங்கள் போன்ற பகுதிகளில் மக்கள் தொகை செறிவுமிக்கதாக காணப்படுகிறது.
4. மலைப்பிரதேசங்கள். வறண்ட நிலப்பகுதிகள், வனப்பகுதிகள், தொலைதூரப்பகுதிகள் போன்ற பகுதிகளில் மக்கள் தொகை குறைவாகவும், மக்களற்றும் காணப்படுகிறது.
5. உத்திரப்பிரதேசம் மாநிலம் இந்தியாவில் அதிக மக்கள் தொகையைக் கொண்ட மாநிலமாகும். சிக்கிம் மிகக்குறைந்த மக்கள் தொகை கொண்ட மாநிலமாகும். யூனியன் பிரதேசங்களிடையே புதுடெல்லி அதிக மக்கள் தொகையுடன் காணப்படுகிறது.

மக்களடர்த்தி

1. மக்களடர்த்தி என்பது சராசரியாக ஒரு சதுரகிலோ மீட்டர் பரப்பளவில் வசிக்கும் மக்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுகிறது. 2011 ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி இந்தியாவின் சராசரி மக்களடர்த்தி ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 382 ஆகும்.
2. உலகின் மக்களடர்த்தி மிகுந்த பத்து நாடுகளில் இந்தியாவும் ஒன்று. இந்தியாவில் மிக அதிக மக்களடர்த்தியைக் கொண்ட மாநிலமாக பீகாரும் மிகக்குறைந்த மக்களடர்த்தியைக் கொண்ட மாநிலமாக அருணாச்சல பிரதேசமும் உள்ளன.
3. யூனியன் பிரதேசங்களில் புதுடெல்லி அதிக மக்களடர்த்தியைக் கொண்டதாகவும், அந்தமான் நிக்கோபர் தீவுகள் குறைந்த மக்களடர்த்தியைக் கொண்டதாகவும் உள்ளன.

269) மனிதவள மேம்பாட்டை அளவிடும் முறையை விளக்குக

Answer : மனிதவள மேம்பாடு:

டாக்டர் மெகபூப்-உல்-ஹக் என்ற பொருளாதார நிபுணரின் கூற்றுப்படி, மனிதவள மேம்பாடு என்பது கல்வி, உடல்நலம், வருமானம், அதிகாரம் போன்றவைகளில் மக்களுக்கான வாய்ப்புகளை அதிகப்படுத்தும் ஒரு செயல் முறையாகும்.

www.Padasalai.Net

மனிதவள மேம்பாட்டை அளவிடும் முறை:

மனிதவள மேம்பாடு என்பது மூன்று அடிப்படைப் பரிமாணங்களைக் கொண்ட ஒரு கூட்டுக் குறியீடாகும்.

1) ஆரோக்கியம் - பிறப்பு காலத்தில்-சராசரி வாழ்நாள் மதிப்பீடு.
2) கல்வி -பள்ளி செல்லும் குழந்தைகளின் படிப்பு காலம், வயது வந்தோர் சராசரியாக பள்ளிகளில் கற்கும் காலம்.
3) வருமானம் - நிகர தேசிய வருமானம் மற்றும் தனிநபர் வருமானம்.

மனிதவள மேம்பாட்டுக் குறியீட்டு (HDI) வகைப்பாடு நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டு புள்ளிகளின் அடிப்படியில் கணக்கிடப்படுகிறது. இது கால்மான விளக்கப் பரவல் குறியீடுகளிலிருந்து பெறப்படுகிறது.

வகைப்பாடு:

1) HDI 0.550 குறைந்த மனிதவள மேம்பாடு
2) HDI 0.550-0.699 மிதமான மனிதவள மேம்பாடு மற்றும்
3) HDI 0.700 - 0.799 கிக்கா மனிதவள மேம்பாடு.
4) HDI 0.800 அதற்குமேல் மிக அதிக மனிதவள மேம்பாட்டைக் குறிக்கிறது.

270) இந்தியாவின் சாலைகளை வகைப்படுத்தி விளக்குக.

Atla Academy
the magical way of success
ISO 9001:2015 CERTIFIED INSTITUTE
தமிழகத்தில் எங்கிருந்து வேண்டுமானலும் உங்கள் MOBILE வழியே படிக்கலாம்

Answer : சாலைகளின் வகைகள்:

1. தேசிய நெடுஞ்சாலைகள்
2. மாநில நெடுஞ்சாலைகள்
3. மாவட்டச் சாலைகள்
4. கிராமச் சாலைகள்
5. எல்லைப்புறச் சரலைகள்
6. தங்க நாற்கரச் சாலைகள்

தேசிய நெடுஞ்சாலைகள்

1. தேசிய நெடுஞ்சாலைகள் இந்திய சாலைப் போக்குவரத்தின் மிக முக்கிய அமைப்பாகும். இது நாட்டின் எல்லைகள், மாநிலத் தலைநகரங்கள், முக்கியத் துறைமுகங்கள் இரயில் நிலையங்கள், முக்கிய சுற்றுலா மையங்கள் ஆகியவற்றை இணைக்கின்றன.
2. இச்சாலைகளை மேம்படுத்துவதற்கும் பராமரிப்பதற்கும் இந்திய அரசின் தரைவழி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சகம் பொறுப்பாகும்.
3. இந்தியாவில் மிக நீளமான தேசிய நெடுஞ்சாலை NH4 ஆகும். இது உத்திரப் பிரதேசத்தில் உள்ள வாரணாசியிலிருந்து தமிழ்நாட்டில் உள்ள கன்னியாகுமரி வரை 2369 கி.மீ நீளத்தைக் கொண்டதாகும்.
4. குறைவான நீளமுடைய தேசிய நெடுஞ்சாலை NH47 A ஆகும். இது எர்ணாகுளத்திலிருந்து 6 கி.மீ தொலைவைக் கொண்ட கொச்சின் துறைமுகத்தை இணைக்கிறது.

மாநில நெடுஞ்சாலைகள்:

1. மாநில நெடுஞ்சாலைகள் பொதுவாக மாநிலத்திலுள்ள முக்கிய மாநகரங்கள், நகரங்கள் மற்றும் மாவட்டத் தலைநகரங்களை, மாநில தலை நகரத்துடனும் தேசிய நெடுஞ்சாலைகளுடனும், அண்டை மாநில நெடுஞ்சாலைகளுடனும் இணைக்கின்றன.
2. இந்த மாநில நெடுஞ்சாலைகள் மாநில பொதுப்பணித்துறையினால் அமைக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றன.

மாவட்டச் சாலைகள்:

1. மாவட்ட சாலைகளானது மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளுடன் மாவட்ட மற்றும் வட்டார தலைமை இடங்களை இணைக்கிறது.
2. மாவட்ட சாலைகள் மாநிலத்தின் பொதுப்பணித்துறையால் அமைக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றன.

www.Padasalai.Net

கிராமச்சாலைகள்:

1. கிராமச் சாலைகள் கிராமப்புறங்களை இணைப்பதில் முக்கிய பங்காற்றுகின்றன.
2. இவை பல்வேறு கிராமங்களை அருகில் உள்ள நகரங்களுடன் இணைக்கின்றன. இவைகளை கிராமப் பஞ்சாயத்துக்கள் பராமரிக்கின்றன.

எல்லைப்புறச்சாலைகள்:

1. எல்லைப்புறச் சாலைகள் நாட்டின் எல்லைகளில் அமைந்துள்ள முக்கியத்துவம் வாய்ந்த சாலைகளாகும்.
2. இவைகள் எல்லைப்புற சாலைகள் நிறுவனத்தால் அமைக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றன.
3. இவ்வமைப்பு 1960இல் நிறுவப்பட்டது.
4. இச்சாலைகள் வடக்கு மற்றும் வடகிழக்கு எல்லைப் பகுதிகளில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும்.
5. எல்லைப்புறச் சாலை நிறுவனத்தால் உலகிலேயே உயரமான (4270 மீ) எல்லைப்புற சாலை லடாக்கிலுள்ளலேவிலிருந்து சண்டிகர் வரை அமைக்கப்பட்டுள்ளது.

தங்க நாற்கரச்சாலை:

5846 கி.மீ நீளத்தையும் 4 முதல் 6 வழிகளைக் கொண்டதாகவும் உள்ளது. இது வடக்கு தெற்காக இந்தியாவின் நான்கு பெரு நகரங்களான புதுடெல்லி-கொல்கத்தா-சென்னை-மும்பை-புதுடெல்லி ஆகியவைகளை இணைக்கிறது. இத்திட்டம் 1999 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

271) இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக.

Atla Academy
the magical way of success
ISO 9001:2015 CERTIFIED INSTITUTE
தமிழகத்தில் எங்கிருந்து வேண்டுமானலும் உங்கள் MOBILE வழியே படிக்கலாம்

Answer : இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் சிறப்புக் கூறுகள் :
1. உலகிலுள்ள எழுநப்பட்ட அனைத்து அரசியலமைப்புகளையும் விட மிகவும் நீளமானது.
2. இதன் பெரும்பாலான கருத்துகள் பல்வேறு நாடுகளின் அரசியலமைப்புகளிலிருந்து பெறப்பட்டவை.
3. இது நெகிழாத்தன்மை கொண்டதாகவும், நெகிழும் தன்மை கொண்டதாகவும் உள்ளது.
4. இது கூட்டாட்சி முறை அரசாங்கத்தை (மத்திய, மாநில அரசுகள்) ஏற்படுத்துகிறது.
5. இந்தியாவை ஒரு சமயச் சார்பற்ற நாடாக்குகிறது.
6. சுதந்திரமான நீதித்துறையை வழங்குகிறது.
7. வயது வந்தோர் வாக்குரிமையை அறிமுகப்படுத்தி 18 வயது நிரம்பிய குடிமக்கள் அனைவருக்கும் எந்தவித பாகுபாடுமின்றி வாக்குரிமையை வழங்குகிறது.

272) அடிப்படை உரிமைகளைக் குறிப்பிடுக.

Answer : i) சமத்துவ உரிமை
ii) சுதந்திர உரிமை
iii) சுரண்டலுக்கெதிரான உரிமை
iv) சமயச்சார்பு உரிமை
v) கல்வி, கலாச்சார உரிமை
vi) அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை

சமத்துவ உரிமை:
1. சட்டத்தின் முன் அனைவரும் சமம்.
2. மதம், இனம், சாதி, பாலினம் மற்றும் பிறப்பிடம் இவற்றின் அடிப்படையில் பாகுபடுத்துவதைத் தடை செய்தல்.
3. பொது வேலைவாய்ப்புகளில் சமவாய்ப்பளித்தல்.
4. தீண்டாமையை ஒழித்தல்.
5. இராணுவ மற்றும் கல்விசார் பட்டங்களைத் தவிர மற்ற பட்டங்களை நீக்குதல்.

சுதந்திர உரிமை:
1. பேச்சுரிமை, கருத்துத் தெரிவிக்கும் உரிமை.
2. அமைதியான முறையில் கூட்டம் கூடுவதற்கு உரிமை, சங்கங்கள், அமைப்புகள் தொடங்க உரிமை, இந்திய நாட்டிற்குள் விரும்பிய இடத்தில் வசிக்கும் மற்றும் தொழில் செய்யும் உரிமை.
3. குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களுக்கான உரிமை மற்றும் தண்டனைகளிலிருந்து பாதுகாப்பு பெறும் உரிமை.
4. வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்திற்குப் பாதுகாப்பு பெறும் உரிமை.
5. தொடக்கக்கல்வி பெறும் உரிமை.
6. சில வழக்குகளில் கைது செய்து தடுப்புக் காவலில் வைப்பதற்கெதிரான பாதுகாப்பு உரிமை.

www.Padasalai.Net

சுரண்டலுக்கெதிரான உரிமை:
1. கட்டாய வேலை, கொத்தடிமை முறை மற்றும் மனிதத்தன்மையற்ற வியாபாரத்தைத் தடுத்தல்.
2. தொழிற்சாலைகள் மற்றும் ஆபத்தான இடங்களில் குழந்தைத் தொழிலாளர் முறையைத் தடுத்தல்.

சமயச் சார்பு உரிமை:
1. எந்த ஒரு சமயத்தினை ஏற்கவும், பின்பற்றவும், பரப்பவும் உரிமை,
2. சமய விவகாரங்களை நிர்வகிக்கும் உரிமை.
3. எந்தவொரு மதத்தையும் பரப்புவதற்காக வரி செலுத்துவதற்கெதிரான சுதந்திரம்.
4. மதம் சார்ந்த கல்வி நிறுவனங்களில் நடைபெறும் வழிபாடு மற்றும் அறிவுரை நிகழ்வுகளில் கலந்து கொள்ளாமலிருக்க உரிமை.

கல்வி கலாச்சார உரிமை :
1. சிறுபான்மையினரின் எழுத்து, மொழி மற்றும் கலாச்சாரப் பாதுகாப்பு.
2. சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களை நிறுவி, நிர்வகிக்கும் உரிமை.

அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை:
தனிப்பட்டவரின் அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படும் போது, நீதிமன்றத்தை அணுகி உரிமையைப் பெறுதல்.

273) முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி.

Answer : அமைச்சரவை தொடர்பானவை:
1. முதலமைச்சரின் பரிந்துரையின் பேரில் ஆளுநர் அமைச்சர்களை நியமிக்கிறார்.
2. அமைச்சர்களுக்குத் துறைகளை ஒதுக்கீடு செய்கிறார்.
3. தனது அமைச்சரவையை மாற்றியமைக்கிறார்.
4. அமைச்சரவைக் கூட்டத்தைத் தலைமை ஏற்று நடத்தி முடிவுகளை எடுக்கிறார்.
5. அமைச்சர்கள் அனைவரையும் கட்டுப்படுத்தி, வழிநடத்தி, இயக்கி, அவர்களது நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கிறார்.

ஆளுநர் தொடர்பானவை:
கீழ்க்காணும் அலுவலர்களின் நியமனங்கள் தொடர்பாக ஆளுநருக்கு ஆலோசா வழங்குகிறார்.
1. மாநில அரசு வழக்குரைஞர்
2. மாநில தேர்தல் ஆணையர்
3. அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் மாநில திட்டக் குழுத்தலைவர் மற்றும் உறுப்பினர்கள்
4. மாநில நிதிக்குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்

சட்டமன்றம் தொடர்பானவை:
1. சட்டமன்ற கூட்டத் தொடரை ஆரம்பிக்கவும் ஒத்திவைக்கவும் ஆளுநருக்கு முதலமைச்சர் ஆலோசனை வழங்குகிறார்.
2. சட்டமன்றத்தில் அரசின் கொள்கைகளை அறிவிக்கிறார்.
3. சட்டமன்றத்தில் மசோதாக்களை அறிமுகப்படுத்துகிறார்.
4. எந்நேரத்திலும் சட்டமன்றத்தைக் கலைக்க ஆளுநருக்குப் பரிந்துரை செய்கிறார்.

274) 'உலக வர்த்தக அமைப்பு' பற்றி எழுதுக.

Answer : உலக வர்த்தக அமைப்பு (WTO)
1. 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் உலக வர்த்தக அமைப்பை (WTO) அமைப்பதற்கு காட் (GATI) உறுப்பு நாடுகள் உருகுவே சுற்றின் இறுதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
2. இந்த அமைப்பை அமல்படுத்திட 104 உறுப்பினர்களால் கையெழுத்திடப்பட்டது.WTO உடன்படிக்கை ஜனவரி 1, 1995 முதல் நடைமுறைக்கு வந்தது.
3. தற்போது உலக வர்த்தக அமைப்பில் 164 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளனர். இதன் தலைமையகம் சுவிட்சர்லாந்திலுள்ள ஜெனிவாவில் அமைந்துள்ளது.

WTO வின் குறிக்கோள்கள்:
1. அயல் நாட்டு வாணிபத்திற்கான விதிகள் அமைத்தல் மற்றும் செயல்படுத்துதல்.
2. வர்த்தக தாராயமயமாக்கலுக்கான பேச்சு வார்த்தை மற்றும் கண்காணிப்பதற்கான ஒரு மன்றத்தை வழங்குதல்.
3. வர்த்தக தகராறுகளைக் கையாளுதல்
4. நிலையான முன்னேற்றம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகிய இரண்டையும் ஒன்றிணைத்து அறிமுகம் செய்தல்
5. உலக வர்த்தகத்தில் வளர்ந்துவரும் நாடுகளின் ஒரு சிறந்த வளர்ச்சிக்கு பாதுகாப்பாக இருத்தல்.
6. முடிவெடுக்கும் செயல்களின் வெளிப்படைத் தன்மையை அதிகரித்தல்.
7. முழு வேலைவாய்ப்பை உறுதிப்படுத்துதல் மற்றும் பயனுள்ள தேவையை அதிகரித்தல் என்பனவாகும்.

www.Padasalai.Net

275) வேலூரில் 1806இல் வெடித்த புரட்சியின் கூறுகளை விளக்குக.

Atla Academy
the magical way of success
ISO 9001:2015 CERTIFIED INSTITUTE
தமிழகத்தில் எங்கிருந்து வேண்டுமானலும் உங்கள் MOBILE வழியே படிக்கலாம்

Answer : புரட்சிக்கான காரணங்கள்.

இந்திய வீரர்களின் மனக்குறை:

1. பிரிட்டிஷாரின் இராணுவத்தில் சிப்பாயாகப் பணியாற்றிய இந்தியர்களுக்கு குறைவான ஊதியமே வழங்கப்பட்டது.
2. பதவி உயர்வுக்கான வாய்ப்புகள் குறைவாகவே இருப்பதும், தங்களின் சமூக மற்றும் சமய நம்பிக்கைகளுக்கு ஆங்கிலேய அதிகாரிகள் குறைவான மதிப்பளித்ததும் இந்திய வீரர்களின் கோபத்தை வலுப்படுத்தியது.
3. விவசாய பின்னணி கொண்ட வீரர்களின் வேளாண் சிக்கலும் அவர்களை மேலும் சிரமப்படுத்தியது.
4. நிலக்குத்தகை முறையில் ஒரு நிலையற்ற தன்மை காணப்பட்டதாலும், 1805 இல் பஞ்சம் ஏற்பட்டதாலும் பல சிப்பாய்களின் குடும்பங்கள் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்தன.
5. திப்புவின் மகன்களும் அவர்தம் குடும்பத்தினரும் வேலூர் கோட்டையில் சிறை வைக்கப்பட்ட வேளையில் தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்தும் வாய்ப்பு கூடிவந்தது.

புதிய இராணுவ விதிமுறை

1. சர் ஜான் கிரடாக் வெளியிட்ட புதிய இராணுவ விதிமுறைகளின்படி, இந்திய வீரர்கள் சீருடையிலிருக்கும்போது சாதி அடையாளங்களையோ, காதணிகளையோ அணியக்கூடாது என கேட்டுக் கொள்ளப்பட்டனர்.
2. அவர்கள் தாடியை முழுமையாகச் சவரம் செய்யவும் மீசையை ஒரே பாணியில் வைத்துக் கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டனர்.
3. விலங்கு தோலினால் ஆன இலச்சினையை கொண்ட புதிய தலைப்பாகையை அணிந்திட வற்புறுத்தப்பட்டனர்.
4. புதிய தலைப்பாகையை அணிவதில் தங்களுக்கு உடன்பாடில்லை என்பதை இந்திய சிப்பாய்கள் போதுமான முன்னெச்சரிக்கை விடுத்தனர். ஆனால் கம்பெனி நிர்வாகம் அதனை கவனத்தில் கொள்ளவில்லை.

புரட்சி வெடித்தல்:

1. 1806 ஜூலை 10 அன்று அதிகாலையிலேயே இந்திய சிப்பாய்கள் புரட்சியில் இறங்கினர்.
2. கோட்டைக் காவற்படையின் உயர்பொறுப்பு வகித்த பேன்கோர்ட் என்பவர் முதல் பலியானார்.
3. அடுத்ததாக இருபத்திமூன்றாம் படைப்பிரிவைச் சேர்ந்த கர்னல் மீக்காரஸ் கொல்லப்பட்டார்.
4. கோட்டையைக் கடந்து சென்று கொண்டிருந்த மேஜர் ஆர்ம்ஸ்ட்ராங் சூழலை விசாரித்தறிய முற்பட்டபோது அவரது உடல் தோட்டாக்களால் துளைக்கப்பட்டது.
5. ஏறத்தாழ பளிரெண்டுக்கும் அதிகமான அதிகாரிகள் அடுத்த ஒரு மணி நேரத்திற்குள் கொல்லப்பட்டார்கள்.

www.Padasalai.Net

ஜில்லஸ்பியின் கொடுங்கோன்மை:

1. ' கேப்டன்' யங்கின் தலைமையிலான குதிரைப் படைப்பிரிவுடன் காலை 9 மணியளவில் கர்னல் ஜில்லஸ்பி கோட்டையை வந்தடைந்தார்.
2. இதற்கிடையில் புரட்சிக்காரர்கள் திப்புவின் மூத்த மகனான ஃபதே ஹைதரை புதிய மன்னராக பேரறிக்கை செய்து மைசூர் சுல்தானின் புலிக் கொடியை கோட்டையில் ஏற்றியிருந்தனர்.
3. போர் விதிமுறைகள் எதையும் பொருட்படுத்தாத ஜில்லஸ்பி வீரர்களின் புரட்சியை வன்மையாக ஒடுக்கினார்.
4. கோட்டையில் மட்டும் எண்ணூறு வீரர்கள் பிணமாகக் கிடந்ததாக பதிவு செய்யப்பட்டுள்ளது.
5. திருச்சிராப்பள்ளியிலும், வேலூரிலும் அறுநூறு வீரர்கள் விசாரணையை எதிர்நோக்கி சிறையிலடைக்கப் பட்டனர்.

புரட்சியின் பின்விளைவுகள்:

1. திப்புவின் மகன்களை கல்கத்தாவுக்கு அனுப்ப உத்தரவிடப்பட்டது.
2. புதிய இராணுவ விதிமுறைகள் திரும்பப் பெறப்பட்டன.

276) 1857ஆம் ஆண்டின் கிளர்ச்சிக்கான காரணங்கள் மற்றும் பின்விளைவுகள் குறித்து விரிவாக ஆராயவும்.

Answer : காரணங்கள்:

அ) ஆங்கிலேய இந்தியாவின் இணைப்புக் கொள்கை:

1840 மற்றும் 1850களில் இரண்டு முக்கியக் கொள்கைகளின் மூலம் அதிக நிலப்பகுதிகள் இணைத்துக் கொள்ளப்பட்டன.

மேலதிகாரக் கொள்கை:

1. ஆங்கிலேயர் தங்களை வானளாவிய அதிகாரங்கள் கொண்ட உயர் அதிகார அமைப்பாக கருதினார்கள்.
2. உள்நாட்டு ஆட்சியாளர்கள் ஊழல்வாதிகள் மற்றும் திறனற்றவர்கள் என்ற அடிப்படையில் புதிய நிலப்பகுதிகள் இணைக்கப்பட்டன.

வாரிசு இழப்புக் கொள்கை:

1. அரசுக்கட்டிலில் அரியணை ஏற தமக்கு பிறந்த ஆண் வாரிசை உருவாக்க உள்நாட்டு ஆட்சியாளர்கள் தவறினால் அந்த ஆட்சியாளரது இறப்பிற்குப்பின் அந்தப் பகுதி ஆங்கிலேயர்களின் ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டது.
2. சதாரா, சம்பல்பூர், பஞ்சாபின் சில பகுதிகள், ஜான்சி மற்றும் நாக்பூர் ஆகியன இந்த பாரிசு இழப்புக் கொள்கையின் அடிப்படையில் ஆங்கிலேய ஆட்சியின்கீழ் கொண்டு வரப்பட்டன.

ஆ) இந்திய கலாச்சார உணர்வுகள் பற்றிய தீவிரத்தன்மை இல்லாதது:

1. 1806ஆம் ஆண்டில் வேலூரில் சிப்பாய்கள் மதக்குறியீடுகளை நெற்றியில் அணிவதற்கும், தாடி வைத்துக் கொள்வதற்கும், தடைவிதிக்கப்பட்டதோடு தலைப்பாகைகளுக்குப் பதிலாக வட்டவடிவிலான தொப்பிகளை அணியுமாறு பணிக்கப்பட்டனர். அதனை எதிர்த்து அவர்கள் கிளர்ச்சி செய்தனர்.
2. இத்தகைய ஆடைக்கட்டுப்பாடுகள் சிப்பாய்களை கிறித்துவ மதத்திற்கு மாறச் செய்வதற்கான ஒரு முயற்சியாக அவர்கள் அஞ்சினார்கள்.
3. அதேபோன்று 1824ஆம் ஆண்டு கல்கத்தா அருகே பராக்பூரில் சிப்பாய்கள் கடல்வழியாக பர்மா செல்ல மறுத்தனர். கடல் கடந்து சென்றால் தங்களது சாதியை இழக்க நேரிடும் என்று அவர்கள் நம்பினார்கள்.
4. ஊதியம் மற்றும் பதவி உயர்வில் பாரபட்சம் காட்டப்படுவது குறித்தும் சிப்பாய்கள் கவலை அடைந்தனர்.
5. ஐரோப்பிய சிப்பாய்களுடன் ஒப்பிடுகையில் இந்திய சிப்பாய்களுக்கு மிகக் குறைந்த அளவில் ஊதியம் வழங்கப்பட்டது.
6. அவர்கள் தரக்குறைவாக நடத்தப்பட்டதோடு மூத்த படையினரால் இனக்குறியிடப்பட்டு அவமதிக்கப் பட்டார்கள்.

www.Padasalai.Net

உடனடிக்காரணம்:

1. புதிய என்ஃபீல்டு துப்பாக்கிக்கு வழங்கப்பட்ட தோட்டா பற்றிய வதந்தியே புரட்சிக்கு உடனடிக் காரணமாகும்.
2. பசு மற்றும் பன்றிக் கொழுப்பினால் தயாரிக்கப்பட்ட பசை இத்தோட்டாக்களில் பயன்படுத்தப்பட்டதாக வதந்தி பரவியது. அத்தோட்டாவினை வாயால் கடிக்க வேண்டியிருந்தது.
3. பசு இந்துக்களுக்கு புனிதமானதாகவும், பன்றி முஸ்லீம் க்கு தடைசெய்யப்பட்ட உணவாகவும் இருந்ததால் சிப்பாய்கள் இவற்றை உபயோகிக்சு மறுத்தனர்.

பின்விளைவுகள்:

அ) இந்தியா ஆங்கில அரசுக் காலனியாக மாறுதல்:

1858ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின்படி இந்தியா பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் நேரடியான ஆட்சியின் கீழ் வந்தது.

ஆ) நிர்வாகத்தில் செய்யப்பட்ட மாற்றங்கள்:

1. இந்திய மக்களுக்கு விக்டோரியா அரசியார் செய்த அறிவிப்பில், பாரம்பரிய நிறுவனங்கள் மற்றும் மதம் தொடர்பான விஷயங்களில் ஆங்கிலேய அரசு தலையிடாது என்று தெரிவித்தார்.
2. அரசப் பணிகளில் இந்தியர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்று உறுதி மொழி கூறப்பட்டது.
3. இந்திய இராணுவத்தில் இந்தியர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைக்கப்பட்டது.
4. இராணுவத்தில் முக்கியமான பதவிகள் மற்றும் பொறுப்புகள் வகிப்பதிலிருந்து இந்தியர்கள் விலக்கி வைக்கப்பட்டனர்.

277) 1905ஆம் ஆண்டு நிகழ்ந்த வங்காளப் பிரிவினையின்போது வங்காள மக்கள் எவ்விதம் நடந்துகொண்டனர்?

Answer : வங்கப்பிரிவினை:

1. கர்சன் பிரபு 1905ஆம் ஆண்டு வங்கப்பிரிவினையினை நடைமுறைப்படுத்தினார். இது மிகவும் அதிருப்தியினை சம்பாதித்த நிகழ்வாகும்.
2. இந்துக்கள், முஸ்லிம்களிடையே பிளவை உருவாக்கி வங்காளத்தில் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக நடந்த அரசியல் நடவடிக்கைகளை அடக்க வங்கப்பிரிவினை வகுக்கப்பட்டது.
3. வங்காளிகளின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்தி தேசியவாத இயக்கத்தை வலுவிழக்கச் செய்வதே வங்கப்பிரிவினைக்கான நோக்கம் என்று வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டது.
4. வங்காளத்தைப் பிரித்து இரண்டு நிர்வாகப் பிரிவுகளின் கீழ் வைத்ததன் மூலம் வங்காள மொழி பேசும் மக்களை, ஒரு மொழி சிறுபான்மையினர் என்ற தகுதிக்கு கர்சன் பிரபு குறைத்துவிட்டார்.
5. இந்தியா முழுவதும் விரிவான போராட்டங்கள் பரவ இந்தப் பிரிவினை வழிவகுத்ததன் மூலம் இந்திய தேசிய இயக்கத்துக்கு புதிய அத்தியாயத்தை உருவாக்கியது.
6. மத அடிப்படையில் வங்காள மக்களை பிரிக்கவேண்டிய பிரிவிளைச் செயலானது அவர்களைப் பிரிப்பதற்குப் பதிலாக ஒன்றிணைத்தது.

பிரிவினைக்கு எதிரான இயக்கம்:

1. பிரிவினை பற்றி யோசனை கூறப்பட்ட நிலையிலேயே மித தேசியவாதிகள், தீவிர தேசியவாதிகள் ஆகிய இரு பிரிவு தலைவர்கள் குழுக்களும் விமர்சனம் செய்தன.
2. ஆரம்பகாலப் பிரிவினைவாத எதிர்ப்பு பிரச்சாரம் இங்கிலாந்தின் பொதுக்கருத்தை மாற்றும் குறிக்கோளில் மட்டுமே பயன்படுத்தப்பட்டது.
3. அதனால் வேண்டுகோள்கள், செய்திப்பிரச்சாரங்கள், மனுக்கள், பொதுக்கூட்டங்கள் ஆகியவற்றின் மூலமாக பிரிவினைக்கு எதிராக அவர்கள் போராட்டம் நடத்தினார்கள்.
4. விரிவான ஆர்ப்பாட்டங்கள் நடந்தபோதிலும் 1905ஆம் ஆண்டு ஜூலை 19ஆம் நாள் வங்கப்பிரிவினை அறிவிக்கப்பட்டது.
5. வங்கப் பிரிவினையை தடுக்கத்தவறிய மித தேசியவாதத் தலைவர்கள், புதிய யுக்தியாக அந்நியப் பொருட்களை புறக்கணிக்கும் நோக்கத்தோடு சுதேசி இயக்கத்தைத் தொடங்கினர்.
6. முழுமையான மறைமுக எதிர்ப்பைத் துவங்குவதற்கு பிரச்சாரத்தைப் பயன்படுத்த மித தேசியவாதிகள் ஆதரவாக இல்லை.
7. மற்றொரு புறம் தீவிர தேசியவாதிகள் வங்காளத்தை தாண்டி இந்த இயக்கத்தை விரிவு செய்வதற்கு மிகப்பெரிய அளவில் பொதுமக்கள் போராட்டத்தை துவங்க ஆதரவாக இருந்தனர்.
8. 1905 அக்டோபர் 16இல் வங்காளம் அதிகாரபூர்வமாகப் பிரிவினையானபோது அந்த நாள் துக்க நாளாக அறிவிக்கப்பட்டது.
9. ஆயிரக்கணக்கானவர்கள் கங்கை நதியில் புனித நீராடியதோடு வந்தே மாதரம் பாடலை பாடியபடி கல்கத்தாவின் சாலைகளில் அணிவகுத்துச் சென்றார்கள். வங்கானத்தில் புறக்கணிப்பும் சுதேசி இயக்கமும் எப்பொழுதும் ஒன்றுடன் ஒன்று இணைந்தே இருந்தன.

www.Padasalai.Net

278) காந்தியடிகளை ஒரு மக்கள் தலைவராக உருமாற்றம் செய்ய உதவிய காரணிகள் என்ன என்று ஆராயவும்

Answer : தென்னாப்பிரிக்காவில் சத்தியாகிரகம்:

1. டிரான்ஸ்வாலில் வசித்த இந்தியர்கள் தலைவரியாக 3 பவுண்டுகளை செலுத்தவேண்டியிருந்தது.
2. அவர்களுக்கென குறிக்கப்பட்ட பகுதிகளை விடுத்து வேறு இடங்களில் அவர்கள் நிலத்தை சொந்தமாக வைத்துக்கொள்ள முடியாத நிலை இருந்தது. மேலும் இரவு 9 மணிக்குப் பிறகு அனுமதியின்றி வெளியிடங்களுக்கு செல்லமுடியாத நிலையும் இருந்தது. இத்தகைய நியாயமற்ற சட்டங்களை எதிர்த்து அவர் போராட்டத்தை தொடங்கினார்.
3. தென்னாப்பிரிக்காவில் குடியேற்றம் மற்றும் இளவேறுபாடு ஆகிய பிரச்சனைகளுக்காகப் போராட சத்தியாகிரக சோதனைகளை அவர் மேற்கொண்டார்.
4. குடிபெயர்ந்தோரை பதிவு செய்யும் அலுவலகங்கள் முன் கூட்டங்களும், ஆர்ப்பாட்டங்களும் நடத்தினார்.
5. காவல்துறையினர் வன்முறையை கட்டவிழ்த்துவிட்டபோதிலும் அவர் எவ்வித எதிர்ப்பையும் காட்டவில்லை.
6. காவல்துறையினரின் கடுமையான நடவடிக்கையையும் பொருட்படுத்தாமல் போராட்டத்தைத் தொடர்ந்தார்.
7. இறுதியாக ஒப்பந்தத் தொழிலாளர்கள் மீது விதிக்கப்பட்ட தலைவரி ஸ்மட்ஸ்-காந்தி ஒப்பந்தத்தின்படி ரத்து செய்யப்பட்டது.

இந்தியாவில் காந்தியடிகளின் தொடக்ககால சத்தியாகிரகங்கள்:

1. இந்திய வருகையின்போது காந்தியடிகள் தான் சந்தித்த கோபால கிருஷ்ண கோகலே மீது பெரும் மரியாதை கொண்டு அவரையே தமது அரசியல் குருவாக ஏற்றார்.
2. கோகலேயின் அறிவுரையின்படி, அரசியலில் ஈடுபடுவதற்குமுன் நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் காந்தியடிகள் பயணம் மேற்கொண்டார். இதனால் மக்களின் நிலையை அவர் அறிந்துகொள்ள வழி பிறந்தது.
3. இதுபோன்ற ஒரு பயணத்தின்போதுதான் தமிழகத்தில் தமது வழக்கமான ஆடைகளை விடுத்து சாதாரண வேட்டிக்கு காந்தியடிகள் மாறினார்.

சம்பரான் சத்தியாகிரகம்:

1. பீகாரில் உள்ள சம்பரானில் "தீன் காதியா" முறை பின்பற்றப்பட்டது. இந்த கரண்டல் முறையில் இந்திய விவசாயிகள் தங்களின் நிலத்தில் இருபதில் மூன்று பங்கு பகுதியில் அவுரி (இண்டிகோ) பயிரிட ஐரோப்பிய பண்ணையாளர்களால் கட்டாயப்படுத்தப்பட்டனர். இந்த வகையில் விவசாயிகள் அதிக சிரமங்களைச் சந்தித்தனர். காந்தியடிகள் சம்பரானுக்குச் சென்றார்.

www.Padasalai.Net

2. காவல்துறையினர் அவரை அங்கிருந்து வெளியேறுமாறு கேட்டுக் கொண்டனர். இச்செய்தி பரவியதையடுத்து ஆயிரக்கணக்கானோர் அவருக்கு ஆதரவாகக் கூடினர்.
3. ராஜேந்திர பிரசாத் மற்றும் பிரஜ்கிஷோர் பிரசாத் ஆகியோர் காந்தி டிகளுக்குத் துணையாக செயல்பட்டனர்.
4. அதன்பிறகு துணைநிலை ஆளுநர் ஒரு குழுவை உருவாக்கினார். காந்தியடிகள் அக்குழுவில் ஒரு உறுப்பினர் ஆனார்.
5. இண்டிகோ பண்ணையாளர்கள், விவசாயிகள் மீது நடத்திய அடக்குமுறையை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் "தீன் காதியா" முறையை ரத்து செய்ய அந்தக் குழு பரிந்துரைத்தது.
6. சம்பரான் சத்தியாகிரகத்தின் வெற்றியை அடுத்து 1918இல் அகமதாபாத் மில் வேலைநிறுத்தம், 1918இல் கேதா சத்தியாகிரகம் ஆகியன காந்தியடிகளை ஒரு மக்கள் தலைவராக உருவாக்கின.

279) தமிழ்நாட்டில் சுதேசி இயக்கம் எவ்வாறு எதிர்கொள்ளப்பட்டது என்பதை விவாதிக்கவும்.

Atla Academy
the magical way of success
ISO 9001:2015 CERTIFIED INSTITUTE
தமிழகத்தில் எங்கிருந்து வேண்டுமானாலும் உங்கள் MOBILE வழியே படிக்கலாம்

www.Padasalai.Net www.TrbTnpsc.com

Answer : 1. சுதேசி இயக்கம் தமிழ்நாட்டில் ஒரு ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. அந்நியப் பண்டங்களைப் புறக்கணித்தல் தொடர்பாக காங்கிரஸ் தீவிரமான இயக்க நடவடிக்கைகளை மேற்கொண்டது.
2. வ.உ.சிதம்பரனார், V. சர்க்கரையார், சுப்பிரமணிய பாரதி, சுரேந்திரநாத் ஆரியா ஆகியோர் தமிழ் நாட்டைச் சேர்ந்த சிறந்த தலைவர்களாவர்.
3. தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஆயிரக்கணக்கில் பொதுமக்கள் கலந்து கொண்ட பொதுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. மக்களைத் திரட்டுவதற்கு முதன் முதலாகத் தமிழ் பயன்படுத்தப்பட்டது.
4. மக்களின் நாட்டுப் பற்று உணர்வுகளைத் தட்டி எழுப்பியதில் சுப்பிரமணிய பாரதியின் தேசபக்திப் பாடல்கள் மிக முக்கியமானவையாகும்.
5. சுதேசி கருத்துக்களைப் பரப்புரை செய்ய பல இதழ்கள் தோன்றின. சுதேசமித்திரன், இந்தியா ஆகிய இரண்டும் முக்கிய இதழ்களாகும்.
6. தீவிர தேசியவாதத் தலைவரான பிபின் சந்திரபால் சென்னையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது ஆற்றிய சொற்பொழிவுகள் இளைஞர்களைக் கவர்ந்தன.
7. சுதேசி இயக்கத்தில் மாணவர்களும் இளைஞர்களும் பெருமளவில் பங்கேற்றனர்.
8. சுதேசியைச் செயல்படுத்துவதில் மேற்கொள்ளப்பட்ட துணிகரமான நடவடிக்கைகளில் ஒன்று தூத்துக்குடியில் வ.உ.சிதம்பரனார் தொடங்கிய சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனி ஆகும்.
9. இவர் காலியா மற்றும் லாவோ எனும் இரு கப்பல்களை விலைக்கு வாங்கி அவற்றை தூத்துக்குடிக்கும் கொழும்புவிற்குமிடையே ஓட்டினார்.
10. மக்கள் செல்வாக்குப் பெற்ற தலைவர்களான வ.உ.சியும், சிவாவும் கைது செய்யப்பட்ட செய்தி பரவியதில் திருநெல்வேலியில் கலவரம் வெடித்தது.
11. காவல் நிலைய, நீதிமன்ற, நகராட்சி அலுவலகக் கட்டடங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. காவலர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் நான்கு நபர்கள் கொல்லப்பட்டனர்.
12. வ.உ.சி சிறையில் கடுமையாக நடத்தப்பட்டதோடு செக்கிழுக்க வைக்கப்பட்டார். கைது செய்யப்படவேண்டிய பிற தலைவர்கள் பிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்திலிருந்த பாண்டிச்சேரிக்கு இடம் பெயர்ந்தனர்.

280) அணிசேரா இயக்கம் பற்றி விரிவான குறிப்பு எழுதுக.

Atla Academy
the magical way of success
ISO 9001:2015 CERTIFIED INSTITUTE
தமிழகத்தில் எங்கிருந்து வேண்டுமானலும் உங்கள் MOBILE வழியே படிக்கலாம்

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

Answer : அணிசேரா இயக்கம்:

1. அணிசேரா இயக்கம் என்ற சொல் 1953இல் ஐ.நா. சபையில் உரையாற்றிய வி. கிருஷ்ணமேனன் என்பவரால் உருவாக்கப்பட்டது.
2. அணிசேராமை என்பது இந்திய வெளியுறவுக் கொள்கையிள் முக்கிய அம்சமாக விளங்குகிறது.
3. இதன் நோக்கம் இராணுவக் கூட்டடணியில் சேராமல் வெளிநாட்டு விவகாரங்களில் தேசிய சுதந்திரத்தை பராமரித்தலாகும்.
4. இவ்வியக்கம் 120 உறுப்பு நாடுகளையும் 17 நாடுகளைப் பார்வையாளர்களாகவும், 10 சர்வதேச நிறுவனங்களையும் கொண்டுள்ளது.
5. அணிசேரா இயக்கம் ஒரு அரசியல் இயக்கத்திலிருந்து பொருளாதார இயக்கமாக மாற்றம் கொண்டுள்ளது என்பது ஒரு குறிப்பிடத்தக்க உண்மையாகும்.

அணிசேரா இயக்கத்தில் நேருவின் பங்கு:

1. இந்தியாவின் முதல் பிரதமரான ஜவகர்லால் நேரு அமெரிக்கா மற்றும் சோவியத் ரஷ்யா ஆகிய வல்லரசு நாடுகள் ஆப்பிரிக்கா, ஆசியாவின் புதியதாக தோன்றிய நாடுகளில் தங்களது செல்வாக்கைச் செலுத்துவதை எதிர்த்தார்.
2. பனிப்போர் நிலவும் இரு துருவ உலகமான அமெரிக்கா மற்றும் சோவியத் ரஷ்யா ஆகிய வல்லரசுகளுடன் சேராமல் அணிசேரா இயக்கம் என்ற வழியைத் தேர்ந்தெடுத்த நேரு, சர்வதேச விவகாரங்களில் மூன்றாவது அணியை உருவாக்க முயன்றார்.

அணிசேரா இயக்கத்தின் நிறுவனத் தலைவர்கள்:

1. ஜவகர்லால் நேரு - இந்தியா
2. டிட்டோ - யூகோஸ்லாவியா
3. நாசர் - எகிப்து
4. சுகர்னோ - இந்தோனேசியா
5. குபாமே நிக்ரூமா - கானா

பனிப்போர் காலத்தில் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை:

இந்தியா அணிசேரா இயக்கத்தில் இருந்தபோதும் சோவியத் யூனியனுடன் 1971ஆம் ஆண்டில் இந்தியா சோவியத் ஒப்பந்தத்தின் மூலம் இணைந்தது. பின்னர் இந்தியா ராணுவ நவீன மயமாக்கலை மேற்கொண்டது.

தற்போதைய அணிசேராமை:

www.Padasalai.Net

1. அணிசேராமை என்பது இராணுவ வலிமை இல்லாது இருத்தல் என்று பொருளல்ல, மோதல்கள் மற்றும் பதட்டங்களை குறைப்பதை உறுதி செய்வது என பொருள்படுவதாகும்.
2. தற்போது அணிசேராமை என்பது நடுநிலைமையாக இருப்பது என்பது மட்டும் பொருள் அல்ல, பிரச்சனைகளை நாடுகள் சுதந்திரமாகத் தீர்மானிப்பதுவும் ஆகும்.
3. கூட்டுசேராமையை விலக்கினாலும் கூட இந்தியா அதிக அளவில் தளது இராணுவ அமைப்பைப் பலப்படுத்தவும் ஒரு அணுசக்தி நாடாகவும் ஆகமுடிந்தது.

281) இந்தியா மற்றும் சர்வதேச அமைப்புகள் குறித்தும் இந்தியா உறுப்பினராக உள்ள ஏதேனும் மூன்று உலகளாவிய குழுக்கள் பற்றிய சிறப்பு அம்சங்கள் குறித்தும் எழுதுக.

Answer : இந்தியா மற்றும் சர்வதேச அமைப்புகள்:

1. இந்தியா ஒரு வலிமை வாய்ந்த வல்லரசாகும். வளர்ந்து வரும் உலகளாவிய செல்வாக்கை அனைத்து நாடுகளிலும் பெற்றுள்ளது.
2. புதிதாக தொழில் மயமாக்கப்பட்ட நாடாக இருப்பதால் பல்வேறு நாடுகளுடன் ஒத்துழைக்கும் சிறந்த வரலாற்றைக் கொண்டுள்ளது.
3. பல்வேறு சர்வநேச அமைப்புகளில் முக்கியத்துவம் வாய்ந்த உறுப்பினராக இந்தியா செயல்படுவதோடு அவற்றில் சிலவற்றின் நிறுவன உறுப்பினராகவும் இருந்து வருகிறது.
4. இந்தியா முறைப்படி அமைக்கப்பட்ட அமைப்புகளான ஐ.நா,சபை, அணிசேரா இயக்கம், சார்க், ஜி-20 மற்றும் காமன்வெல்த் போன்றவைகளில் உறுப்பினராக உள்ளது.
5. இராணுவ மோதல்களை முடிவுக்கு கொண்டுவருவது மற்றும் நாடுகளிடையே அமைதி மற்றும் முன்னேற்றத்தை ஏற்படுத்துவது போன்ற ஐ.நா.சபை எடுக்கும் அனைத்து முயற்சிகளிலும் இந்தியா உதவுகிறது.

ஐ.பி.எஸ்.ஏ (IBSA):

ஐ.பி.எஸ்.ஏ. என்ற உலகளாவிய குழுவில் இந்தியா, பிரேசில் மற்றும் தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. இக்குழு வேளாண்மை, கல்வி, ஆற்றல் வர்த்தகம், கலாச்சாரம் மற்றும் பாதுகாப்பில் கவனம் செலுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

பி.சி.ஐ.எம்: (BCIM);

1. இந்தியா, சீனா, வங்காளதேசம் மற்றும் மியான்மர் ஆகிய நாடுகள் இக்குழுவில் இடம்பெற்றுள்ளன.
2. இதன் குறிக்கோள்கள், இயற்கைப் பேரழிவுகள் மற்றும் தரவு மீறல்கள் போன்ற அச்சுறுத்தல்களை சமாளித்தல், வணிக நலன் பாதுகாத்தல் என்பனவாகும்.

ஈ.ஏ.எஸ் (EAS) (கிழக்கு ஆசிய உச்சிமாநாடு)

1. இவ்வுலகளாவிய குழுவில் 10 ஆசிய நாடுகள் மற்றும் ஐக்கிய அமெரிக்கா, சீனா, இந்தியா, ஜப்பான் உள்பட முக்கிய எட்டு நாடுகள் உறுப்பு நாடுகளாக இடம் பெற்றுள்ளன.
2. அமைதி மற்றும் நிலைத்தன்மையை ஊக்குவித்தல் இதன் முக்கிய குறிக்கோள்களாகும்.

282) பொருளாதார முன்னேற்ற கொள்கைகளில் அரசின் பங்கினை விவரி?

ATLA ACADEMY

Answer : இந்தியாவில் மத்திய, மாநில மற்றும் உள்ளாட்சி ஆகிய மூன்று நிலையிலான அரசாங்கங்கள் மக்கள் மற்றும் சமூகத்தின் நலனுக்காக பல்வேறு செயல்பாடுகளைச் செய்து வருகின்றன.

பாதுகாப்பு (அ) இராணுவம் :

1. எதிரிகளிடமிருந்து மக்களைப் பாதுகாப்பது இராணுவத்தின் அத்தியாவசியப் பணியாகக் கருதப்படுகிறது.
2. பாதுகாப்பு படைகளை உருவாக்குவதற்கும், பராமரிப்பதற்கும் மத்திய அரசாங்கமே பொறுப்பானதாகும்.

அயல்நாட்டுக் கொள்கை :

1. இன்றைய உலகில், நாம் அனைத்து உலக நாடுகளுடனும் நட்பான உறவைப் பராமரித்தல் அவசியமானதாகும்.
2. உலக அமைதிக்காக இந்தியா உறுதி ஏற்றுள்ளது.
3. ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்வதன் மூலமும், மூலதனம் மற்றும் உழைப்பை பரிமாற்றம் செய்வதன் மூலமும் நாம் நல்ல பொருளாதார உறவினை பராமரிக்க முடியும். இந்த சேவையை மத்திய அரசாங்கம் வழங்குகிறது.

அவ்வப்போது தேர்தல்களை நடத்துதல் :

இந்தியா ஒரு ஜனநாயக நாடு. நாம் நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றத்திற்குப் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கின்றோம். இதேபோல், மாநில அரசுகள் உள்ளாட்சி மன்றங்களுக்கு தேர்தலை மாநிலத்திற்குள் நடத்துகின்றன.

சட்டம் மற்றும் ஒழுங்கு :

1. மத்திய மற்றும் மாநில அரசுகள் நமது உரிமைகள், சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும், நமது பொருளாதாரம் மற்றும் சமூகத்தை ஒழுங்குபடுத்துவதற்கும் ஏராளமான சட்டங்களை இயற்றுகின்றன.
2. மத்திய அரசு தேசிய, மாநில மற்றும் கீழ்நிலைகளில் உள்ள நீதிமன்றங்களை உள்ளடக்கிய ஒரு துடிப்பான நீதி அமைப்பின் மூலம் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக அமைத்துள்ளது.
3. மேலும் அந்தந்த மாநிலங்களில் காவல்துறையை நிர்வகிக்கும் பொறுப்பை மாநில அரசுகள் ஏற்றுக்கொள்கின்றன.

பொது நிர்வாகம் மற்றும் பொதுப்பண்டங்களை வழங்குதல் :

1. அரசாங்கம் பொதுவாக பல்வேறு துறைகள் மூலம் பொருளாதாரத்தையும் சமூகத்தையும் நிர்வகிக்கிறது.
2. வருவாய் துறை, பள்ளிகள், மருத்துவமனைகள் கிராம வளர்ச்சி போன்றவைகள் எடுத்துக்காட்டுகளாகும்.
3. உள்ளூர் அரசாங்கங்கள், உள்ளூர் சாலைகள், வடிகால், குடிநீர், கழிவு சேகரிப்பு மற்றும் அகற்றல் போன்ற பொது பணிகளை வழங்குகின்றன.

www.Padasalai.Net

வருமான மறுபகிர்வு மற்றும் வறுமை ஒழிப்பு :

1. பல்வேறு நடவடிக்கைகளுக்கு நிதியளிக்க அரசு பல்வேறு வரிகளை வசூலிக்கின்றது. அதிக வருமானம் உடையவர்கள் ஏழைகளைவிட அரசாங்கத்திற்கு அதிக வரி செலுத்தக்கூடிய வகையில் வரி வசூலிக்கப்படுகிறது.
2. சில அடிப்படைத் தேவைகளான உனாவு, தங்குமிடம், உடை, கல்வி, சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் மாத வருமானம் போன்றவற்றினை ஏழைகளுக்கு வழங்குவதற்காக அரசாங்கம் பணத்தைச் செலவிடுகிறது.

பொருளாதாரத்தை ஒழுங்குபடுத்துதல் :

1. மத்திய அரசு, பணத்தின் அளிப்பு, வட்டி வீதம், பணவீக்கம் மற்றும் அந்நியச் செலாவணி ஆகியவற்றை இந்திய மைய வங்கி மூலம் கட்டுப்படுத்துகிறது.
2. இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் மற்றும் இந்திய போட்டி ஆணையம் போன்ற பல்வேறு முகவர்கள் மூலமாகவும் மத்திய அரசு பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்துகிறது.
3. இந்தியாவில் உள்ள அரசாங்கங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் மலிவு விலையில் அத்தியாவசியமான பொருட்கள் மற்றும் சேவைகளை மக்களுக்கு வழங்குகின்றன.

283) GST யின் அமைப்பை எழுதுக

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

Answer : மாநில பண்டங்கள் மற்றும் பணிகள் வரி (SGST) (மாநிலத்திற்குள்) :
1. மதிப்புக் கூட்டு வரி (VAT)
2. ஆடம்பர வரி
3. பரிசுச் சீட்டு வரி
4. விற்பனை வரி
5. கொள்முதல் வரி
6. பொழுதுபோக்கு வரி
7. மாநில கூடுதல் கட்டணம் மற்றும் வரிகள்

மத்திய பண்டங்கள் மற்றும் பணிகள் வரி (CGST) (மாநிலத்திற்குள்) :
1. மத்திய சுங்கத்தீர்வை
2. கூடுதல் கட்டணம்
3. சேவை வரி
4. எதிர் வரி
5. கல்விக் கட்டணம் (இடைநிலைக் கல்வி மற்றும் மேல்நிலைக் கல்வி வரி}
6. கூடுதல் ஆயத்தீர்வை

ஒருங்கிணைந்த பண்டங்கள் மற்றும் பணிகள்- வரி (IGST) (மாநிலங்களுக்கு இடையே) :
1. நான்கு முக்கிய GST விகிதங்கள் உள்ளன.
5%, 12%, 18% மற்றும் 28%
2. காய்கறிகள் மற்றும் உணவு தானியங்கள் போன்ற வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசியத் தேவைகளுக்கான அனைத்து பண்டங்களுக்கும் இந்த வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகின்றது.

284) தொழில்மயமாதலின் வளர்ச்சிக்கு பங்களிப்புகள் யாவை?

Answer : 1. ஒரு பொருளாதாரத்தில் பிற உற்பத்தியாளர்களுக்குத் தேவையான உள்ளீடுகளை உருவாக்குவது அவசியம். வேளாண் உற்பத்தித்திறன் அதிகரிக்க உரங்கள் மற்றும் டிராக்டர்கள் போன்ற தொழில்களுக்கு உள்ளீடுகள் தேவைப்படுகின்றன.
2. உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர் பண்டங்கள் ஆகிய இரண்டிற்கும் இடையே ஒரு சந்தை நிலவுகிறது.
3. அதேபோல் வங்கி, போக்குவரத்து மற்றும் வர்த்தகம் போன்ற பணிகள் தொழிற்சாலைகளின் உற்பத்தியை சார்ந்தே உள்ளது.
4. நவீன உற்பத்தி முறைகளை பயன்படுத்துவதன் மூலம் தொழில்கள் சிறந்த உற்பத்தி திறனை அளிக்கின்றன.
5. இதனால் உற்பத்தி செய்யப்படும் அனைத்து பண்டங்களின் உற்பத்திச் செலவும் குறைகிறது. இதன் காரணமாக மலிவான விலையில் பண்டங்களை வாங்கிட உதவவும் மற்றும் அதிகளவு உற்பத்தித் தேவையை உருவாக்கவும் உதவுகிறது.
6. அத்தகைய பண்டங்களின் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் தொழில்மயமாதல் வேளாண்மையில் ஈடுபடும் அதிக உழைப்பாளர் சக்தியை ஈர்க்க உதவுகிறது. எனவே வேலைவாய்ப்பை உருவாக்குவது தொழில்மயமாதலின் ஒரு முக்கிய நோக்கமாகும்.
7. தொழில் மயமாதலுக்கு நன்மை தருவது தொழில்நுட்ப மாற்றமே ஆகும். நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலம் தொழில்மயமாதலின் முறைகளையும் அதன் வளர்ச்சியையும் அறிந்துகொள்ள முடிகிறது. அவற்றின் விளைவாக உழைப்பாளர்களின் உற்பத்தித்திறன் அதாவது உள்ளீடு அதிகரித்து அவர்கள் அதிக வருமானம் ஈட்ட உதவுகிறது.
8. அதிக வருமானம் அதிகரிப்பதன் மூலம் பண்டங்கள் மற்றும் பணிகளின் தேவைக்கு வழிவகுக்கிறது.
9. எனவே தொழில்மயமாதல் ஒரு நாட்டின் பொருளாதாரத்தை பாதுகாக்கவும் ஏற்றுமதி மூலம் அந்நிய செலாவணியை ஈட்டவும் உதவுகிறது.

285) தொழில்முனைவோரின் பங்கினைப் பற்றி விளக்குக.

www.Padasalai.Net

Answer : **தொழில் முனைவோரின் பங்கு:**

1. நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் முள்ளேற்றத்தில் தொழில் முனைவோரின் பங்கு மிக முக்கியமானதாகும்.
2. தொழில் முனைவோர் கிராமப்புற மற்றும் பின்தங்கிய தொழிற்சாலைகளை முன்னேற்றுவதுடன், நாட்டில் பல்வேறு பகுதிகளில் நிலவும் வட்டார ஏற்றத் தாழ்வுகளை நீக்குகிறார்கள்.
3. இவர்கள் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) மற்றும் தலா வருமானம் உயர்வதற்கு உதவி புரிகிறார்கள்.
4. குடிமக்களின் அசையா சேமிப்புகள் மற்றும் நாட்டின் ஏற்றுமதி வியாபாரம் மூலமாக மூலதனத்தை செயல்பட வைக்கிறார்கள்.
5. தொழில் முனைவோர் கைவினைஞர்கள், தொழில்நுட்ப தகுதிவாய்ந்த நபர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களுக்கு பெரிய அளவிலான வேலை வாய்ப்பை வழங்குகிறார்கள் மற்றும் தொழில் நுட்பத்தை மாற்றும் சூழலில் பணியாற்றி மேலும் புத்தாக்கத்தின் மூலம் இலாபத்தை அதிகரிக்க முயற்சிக்கின்றனர்.
6. தொழில் முனைவோர், குறைந்த விலையில் சிறந்த தரமான பொருட்களைப் பெற மக்களுக்கு உதவுகின்றனர்.
7. இதன் விளைவாக அவர்களின் வாழ்க்கைத்தரம் மேம்படுகிறது.

23 x 10 = 230

286) உலக வரைபடத்தில் பின்வரும் நாடுகளைக் குறிக்கவும்.

1. கிரேட் பிரிட்டன்
2. ஜெர்மனி
3. பிரான்ஸ்
4. இத்தாலி
5. மொராக்கோ
6. துருக்கி
7. செர்பியா
8. பாஸ்னிய
9. கிரீஸ்
10. ஆஸ்திரிய-ஹங்கேரி
11. பல்கேரியா
12. ருமேனியா

www.Padasalai.Net

Answer :

287) உலக வரைபடத்தில் கீழ்கண்டவற்றைக் குறிக்கவும்.

அச்சு நாடுகள்

Answer :



288) உலக வரைபடத்தில் கீழ்கண்டவற்றைக் குறிக்கவும்.
நேச நாடுகள்

Answer :



www.Padasalai.Net

289) உலக வரைபடத்தில் கீழ்கண்டவற்றைக் குறிக்கவும்.
ஹிரோஷிமா, நாகசாகி, ஹவாய் தீவு, மாஸ்கோ, சான் பிரான்சிஸ்கோ

Answer :



290) கொடுக்கப்பட்டுள்ள இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.
மலைத் தொடர்கள்:
காரகோரம், லடாக், ஜாஸ்கர், ஆரவல்லி, மேற்கு தொடர்ச்சி மலை, கிழக்கு தொடர்ச்சி மலை.

Answer :



291) கொடுக்கப்பட்டுள்ள இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.
ஆறுகள்: சிந்து, கங்கை, பிரம்மபுத்ரா, நர்மதா, தபதி, மகாநதி, கோதாவரி, கிருஸ்ணா மற்றும் காவிரி.

Answer :



asalai.Net

292) கொடுக்கப்பட்டுள்ள இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.
பீடபூமிகள்: மாளவபீடபூமி, சோட்டா, நாகபுரிபீடபூமி, தக்காண பீடபூமி.

Answer :



293) இந்திய நில வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும்.

1. தென்மேற்கு பருவக்காற்று வீசும் திசை.
2. வடகிழக்கு பருவக்காற்று வீசும் திசை.
3. அதிக மழை பெறும் பகுதிகள்.
4. மலைக் காடுகள்.
5. பன்னா உயிர்க்கோள பெட்டகம்.
6. அகத்தியர் மலை உயிர்க்கோளப் பெட்டகம்.

asalai.Net

Answer :



294) 1. வண்டல் மண் அதிகம் காணப்படும் பகுதிகளைக் குறிப்பிடுக.

2. கரிசல் மண் காணப்படும் பகுதிகளைக் குறிக்கவும்.
3. சணல் விளையும் பகுதிகளைக் குறிக்கவும்.
4. காபி மற்றும் தேயிலை விளையும் பகுதிகள் ஏதேனும் மூன்றை குறிக்கவும்.
5. பாலை மண் காணப்படும் பகுதிகளைக் குறிக்கவும்.

Answer :



295) 1. ஹிராகுட் அணை, மேட்டூர் அணை மற்றும் தாமோதர் அணைகளின் அமைவிடங்களைக் குறிக்கவும்.

2. தூத்துக்குடி, சென்னை, கொச்சின், மும்பை மற்றும் மசூலிப்பட்டினம் மீன் பிடித்தல் மையங்களைக் கண்டறிக.

3. காவேரி மற்றும் கோதாவரி டெல்டா பகுதிகளைக் குறிக்கவும்.

Answer :



salai.Net

296) இரும்பு தாது உற்பத்தி மையங்கள்.

Answer :



297) பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு மையங்கள்.

Answer :



298) நிலக்கரி சுரங்கங்கள்.

Answer :



299) பருத்தி விளையும் பகுதிகள்.

Answer :



salai.Net

300) இரும்பு எஃகு தொழிலகங்கள்.

Answer :



301) தேசிய நெடுஞ்சாலை எண். 7(NH7).

Answer :



asalai.Net

302) இந்தியாவின் முக்கியத் துறைமுகங்கள்.

Answer :



303) இந்தியாவின் முக்கிய பன்னாட்டு விமான நிலையங்கள்.

Answer :



304) மக்களடர்த்தி மிகுந்த இந்திய மாநிலங்கள்.

Answer :



305) இந்தியாவின் அதிக கல்வியறிவு பெற்ற மாநிலம்.

salai.Net

Answer :



306) இந்திய இரயில்வே மண்டலங்கள்.

Answer :



asalai.Net

307) தமிழ்நாட்டில் உள்ள ஆறுகள் , மண் பரவல் மற்றும் காடுகளின் வகைகளை வரைபடத்தில் குறிக்கவும்.

Answer :





Padasalai.Net



308) முக்கிய பயிர் விளையும் பகுதிகள், தாதுக்கள், விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களைத் தமிழநாடு வரைபடத்தில் குறிக்கவும்.

Answer :







Padasalai.Net



5 x 10 = 50

309) கீழ்க்கண்ட நிகழ்வுகளைக் காலக்கோட்டில் குறிக்கவும்.
1914 - முதல் உலகப்போர் தொடக்கம்
1917 - ரஷ்யப் புரட்சி
1918 - முதல் உலகப்போர் முடிவு
1919 - வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை
1920 - பன்னாட்டுச் சங்கம் அமைக்கப்படுதல்

Answer : 

www.Padasalai.Net

310) கீழ்க்கண்ட நிகழ்வுகளைக் காலக்கோட்டில் குறிக்கவும்.
1922 - முசோலியின் ரோமாபுரி அணிவகுப்பு
1927 - வியட்நாம் தேசியக்கட்சி உதயம்
1929 - பொருளாதாரப் பெருமந்தம்
1933 - ஹிட்லர் ஜெர்மனியின் சான்சிலர் (முக்கிய அமைச்சர்) ஆதல்
1935 - முசோலினி எத்தியோப்பியாவின் மீது படையெடுத்தது

Answer : 

311) கீழ்க்கண்ட நிகழ்வுகளைக் காலக்கோட்டில் குறிக்கவும்
1939 - இரண்டாம் உலகப் போரின் தொடக்கம்
1940 - பிரிட்டன் போர்
1941 - முத்துத் துறைமுக நிகழ்வு
1942 - ஸ்டாலின் கிரேடு போர்
1945 - இரண்டாம் உலகப்போர் முடிவு ஐக்கிய நாடுகள் சபை துவக்கம்

Answer :



312) கீழ்க்கண்ட நிகழ்வுகளைக் காலக்கோட்டில் குறிக்கவும்
1934 – நீண்ட பயணம்
1949 - வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு (நேட்டோ NATO)
1954 - தென்கிழக்கு ஆசிய ஒப்பந்த அமைவு (சீட்டோ SEATO)
1955 - வார்சா ஒப்பந்தம்
1956 - சூயஸ் கால்வாய் சிக்கல்
1961 - பெல்கிரேட் மாநாடு

Answer :



313) இந்திய தேசிய இயக்கத்தின் முக்கிய நிகழ்வுகள் (1900-1947) காலக்கோட்டில் குறிக்க.

Answer :



asalai.Net

Atla Academy
the magical way of success
ISO 9001:2015 CERTIFIED INSTITUTE
தமிழகத்தில் எங்கிருந்து வேண்டுமானாலும் உங்கள் MOBILE வழியே படிக்கலாம்